# அரங்கம்

செய்திகள்

கிழக்கு மண்ணில் இருந்து ஒரு தொடர்பூடகம்



அரங்கம் இணைய வானொலி






www.arangamnews.com





## 'வளர்ச்சியே எங்கள் முதல் தேவை என்கின்றனர் கிழக்கு மக்கள்'

இலங்கையில் தேசிய மட்டத்தில் பல பிரச்சினைகள் இருந்தாலும் கிழக்கு மாகாண மக்களை பொறுத்தவரை பொருளாதார முன்னேற்றமும் அபிவிருத்தியுமே தற்போதைய முதற்தேவை என்று இப்பகுதியின் சமூக முக்கியஸ்தர்கள் கூறியுள்ளனர்.

பொதுமக்களுடன் நல்ல தொடர்பை பேணிவருகின்ற இவர்கள் சமூக அமைப்புக்களின் ஊடாக பல பொதுச் செயற்பாடுகளிலும் ஈடுபடுபவர்களாவர்.

இலங்கையில் உள்ளராட்சி தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. புதிய சபைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் பல அரசியல் கட்சிகளும் ஈடுபட்டுள்ளன. ஆனால்,

இந்த தேர்தலுக்கான பிரச்சாரங்களின் போது பெரும்பாலும் தேசிய மட்டப் பிரச்சினைகளே விவாதப் பொருளாக இருந்தன.

பிணைமுறி ஊழல் போன்ற விசயங்களில் தேசியக் கட்சிகள் அக்கறை காட்டிய அதேவேளை, தமிழ் கட்சிகளின் பிரச்சாரங்கள் கூட அரசியலமைப்பு மாற்றத்தின் ஊடான இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தையே சுற்றிநின்றன.

இந்த நிலையிலேயே கிழக்கு மாகாண மக்களின் நலன்களில் அக்கறை கொண்ட சமூகப் பிரமுகர்கள் சிலர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளனர்.

### பொன். செல்வநாதன்

தேசிய மட்டத் தேர்தல்களோடு இந்த தேர்தலை ஒப்பிட முடியாது என்று கூறுகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாணமட்ட முன்னாள் பணிப்பாளரான பொன். செல்வநாதன், இந்த தேர்தல் வெற்றிகளில் பெரும்பாலும்

கட்சிகளுக்கு அப்பால் கிராம மட்டத்தில் தனிநபர்களின் செல்வாக்கும் பங்களிப்பு செய்ததாக கூறுகிறார்.

தேசிய மட்டப் பிரச்சினைகள் ஒருபுறம் இருந்தாலும் கல்வி, வீதி அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி போன்றவற்றிலேயே மக்களின் ஆர்வம் அதிகம் இருந்ததாகவும், இளைஞர்களை பொறுத்தவரை தொழில் வாய்ப்பு சுயமுன்னேற்றம் ஆகியவையே அவர்களின் இன்றைய முதன்மைப் பிரச்சினை என்றும் அவர் கூறுகின்றார்.


தொடர்ச்சி... (பக்கம்-04)


பல களங்களை கண்டதுதான் இந்த கிழக்கு மண்.

ஏற்ற இறக்கங்களுடனான பல திடல்கள் அதில் அடக்கம்.

போர் என்ற “தீ” எரித்துப்போன மண்களில் இதுவும் ஒன்றே.

ஆனால், இலங்கையின் ஏனைய பகுதிகளில் இல்லாத ஒரு பிரத்தியேகமான சூழ்நிலை இங்கு எஞ்சி நிற்கிறது. மூவின மக்கள் வாழ்வது இங்கு சிறப்பு என்றாலும், ஏனைய சமூகங்கள் வளர்ச்சிபெற முயற்சித்த வேளை, ஒரு சமூகம் மாத்திரம் போரினால் இடிந்து போனமை சமூகச் சமநிலையை குழப்பியுள்ளது.

அந்தச் சமநிலை பேணப்படும் போது மாத்திரமே அனைத்து இனங்களும் இணக்கமாக வாழமுடியும். அந்தச் சமநிலையை ஏற்படுத்துவதற்கான முன்னோடி விவாதங்களுக்கான களமே இந்த “அரங்கம்”.

கிழக்கிலங்கை தமிழ் மக்களின் சமூக, பொருளாதார, கலை, கலாச்சார மற்றும் அரசியல் நிலவரங்களை இது பேசும். அதை பேசவிளைபவர்களுக்கு ஒரு தளமாக இது அமையும்.


இந்த அனைத்து அம்சங்களிலும் கிழக்கிலங்கை தமிழர் பல காரணங்களால் பிந்தங்கி நிற்கிறார்கள் என்பது இங்குள்ள பல தரப்பினரதும் கருத்து. அதனுடன் “அரங்கம்” இணங்கும் அதேவேளை, அதில் முரண்படுபவர்களுக்கும் அது களம் தரும்.

கிழக்கு மாகாணத்தை மையப்படுத்திய ஆரோக்கியமான விவாதங்களுக்கான ஒரு கனதியான தளமாக நிலைப்பதுவே எமது கடமை. அதற்கு இந்த மண்ணினதும் இதன் மீது அக்கறை கொண்ட அனைவரினதும் ஆதரவை நாம் நாடி நிற்கின்றோம். மீண்டும் மிடுக்காய் ஒரு சக வாழ்வுக்கான பயணத்தை தொடருவோம். எமது முதல் அடியை பலர் தொடர வழி செய்வோம்.

அன்புடன்
பூபாலரட்ணம் சீவகன்




# ஏன் ராஜபக்ஷ வெற்றி பெற்றார்?



## அவராக தேடிய வெற்றியா? ஏனையோர் தேடிக்கொடுத்ததா?



இலங்கையில் பெருமெடுப்பில் உள்ளராட்சி தேர்தல் நடந்து பத்து நாட்கள் கடந்துவிட்டன. இந்த தேர்தல் முடிவுகள் அந்தந்த சபைகள் ஆட்சியமைப்பதில் ஒரு புறம் சிக்கல்களை ஏற்படுத்தியது மாத்திரமல்லாமல், தேசிய மட்ட அரசாங்கத்துக்கும் பெரும் சிக்கலை ஏற்படுத்திச் சென்றிருக்கின்றன.

ஆனால், இந்தத் தேர்தல் நடந்து பத்து நாட்கள் ஆகிய பின்னரும் பலரது மனதிலும் தேங்கி நிற்கின்ற ஒரு கேள்வி, எப்படி ராஜபக்ஷ இவ்வளவு பெரிய வெற்றியை பெற்றார் என்பதே. அதுவும் தன்னுடைய சொந்தக்கட்சி ஏற்கனவே நாடாளுமன்றத்தில் இரண்டாவது இடத்தில் இருக்க, சுமார் பத்து மாதங்களுக்கு முன்னதாக மாத்திரம் (அதில் இருந்தும் இல்லாமலும் காட்டிக்கொண்டு) இன்னுமொரு கட்சியை அவர் தோற்றுவிக்க. அந்தக் கட்சி குறுகிய காலத்தில் பெரும் வெற்றியை பெற்றிருக்கிறது.

இது எப்படி சாத்தியமானது என்பதுதான் இங்கு எல்லோர் மனதிலும் உள்ள கேள்வி.

இது உண்மையில் ராஜபக்ஷ தானாக தேடிக்கொண்ட வெற்றியல்ல. அடுத்தவர்கள் அவருக்கு தேடிக்கொடுத்த ஒரு வெற்றிதான்.

சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஊழல், வன்முறை, வெள்ளை வான் கடத்தல்கள் என்றெல்லாம் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக குற்றஞ்சாட்டித்தான் இப்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆனால், இப்போது அதே ஊழல் என்ற பொறியில் அவர்களே விழும் நிலை வந்துவிட்டது மாத்திரமல்லாமல் மூன்றாவது இடத்தில் இருந்த ராஜபக்ஷவை அது முதலிடத்துக்கு கொண்டு வந்தும் விட்டது.

உண்மையில் இப்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் வன்முறைகள், வெள்ளைவான் கடத்தல்கள் ஆகியவை குறைந்து போய்விட்டன என்பது உண்மைதான். அவை நடக்கவில்லை என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவுக்கு ''எதுவுமே'' நடக்கவில்லை என்பதும் இந்த ஆட்சியில் உண்மையாகிவிட்டது.

ஆம், செயற்பாடு இழந்த ஒரு அரசாங்கமாக இந்த அரசாங்கம் இருந்து வந்துள்ளது. ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஒருபுறம் உச்சத்திலிருந்தாலும், மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் காலத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. நெடுஞ்சாலைகள், கிராமங்களுக்கான உட்கட்டமைப்புக்கள் என எல்லாம் மிகவும் வேகமாக நடந்தன. போரினால், மஹிந்த ராஜபக்ஷ மீது கடுமையான கோபத்தில் இருக்கும் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களினால் கூட அவர் வீதிகளை சிறப்பாக அமைத்ததை மறுக்க முடியாது.

ஆனால், அப்போது இருந்த வன்முறைகள் இப்போது இல்லாது போனாலும் கூட தற்போதைய ஆட்சியில் வளர்ச்சி என்று எதுவுமே நடக்கவில்லை. அவ்வளவு ஏன், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்ளேயே வீதிகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கின்றன. அவற்றை கூட இவர்களால் திருத்த முடியாதா என்று பொதுமக்கள் கோபம் அடைந்திருக்கிறார்கள்.


ஆகவே இங்கு ராஜபக்ஷ செய்ததற்காக அல்லாமல், இவர்கள் செய்யாததற்காகத்தான் மக்கள் அவருக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

## கூட்டணி ஆட்சியின் குளறுபடி

ரணில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் கூட்டணியில் கூட ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என இரு கட்சிகள் இருந்தன. இதுவரை காலமும் எதிரணியில் மாத்திரம் இருந்து வந்த இந்தக் கட்சிகள், முதல் தடவையாக இலங்கை வரலாற்றில் கூட்டணியை அமைத்தாலும், அதன் உறுப்பினர்களின் மனதில் எதிரிப்போக்கு தணியவில்லை. ஆளையாள் கிடைக்கும் போதெல்லாம் காலை வாரிவிடுவதல்லாமல், எல்லா நேரத்திலும் ஆளையாள் தூற்றியும் வந்தனர்.

இந்த தூற்றலால் இவர்கள் இரு தரப்பின் மீதும் மக்களுக்கு ஏற்பட்ட எரிச்சல் உணர்வு, மூன்றாவது ஆள் மீது பாசமாக மாறிவிட்டது.





## வை.'.பை அரசியல்

தேர்தலுக்கு முன்னதாக பிரச்சாரக் கூட்டத்தில் கிராமங்கள் எல்லாவற்றுக்கும் இலவச வை.'.பை (இலவச இணைய வசதி) வழங்கப்போவதாக ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி வழங்கினார்.



அவர் சொன்ன விசயம் கிராமங்களுக்கு பலன் தரக்கூடிய விசயந்தான். உண்மையில் கிராமப்புறங்களில் கைபேசி பாவனை அதிகரித்துள்ளமையும், அதற்கு இலவச வை.'.பை அவசியம் என்பதும் உண்மைதான். ஆனால், ராஜபக்ஷ கூடாரமோ, அதனை ரணிலுக்கு எதிராக திருப்பி விட்டது. கிராமங்களுக்கு தேவை வை.'.பை அல்ல உட்கட்டமைப்பு வசதிதான் என்று அவர்கள் வை.'. பை மூலமே பிரச்சாரம் செய்தனர். இந்த பிரச்சாரம் நகரங்களை எந்தளவுக்கு கவர்ந்ததோ இல்லையோ, நையாண்டி பாணியில் வை.'.பையின் ஊடாக கிராங்களை, கிராம மக்களை வெகுவாக கவர்ந்துவிட்டது. அதுவும், மஹிந்த அணியின் வெற்றிக்கு காரணமாகிவிட்டது.

இதனை உணர்ந்துதான் இப்போது பசில் ராஜபக்ஷ கூட வெளிநாட்டு செய்தியாளர்களிடம் பேசும் போது, கிராமப்புற மக்களின் உட்கட்டமைப்பில் தாம் கவனம் செலுத்தப் போவதாக கூறியுள்ளார்.

**ராஜபக்ஷ செய்ததற்காக அல்லாமல் இவர்கள் செய்யாததற்காக வாக்குகள் விழுந்திருக்கின்றன**

## பிணைமுறி ஊழல் விவகாரம்

மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சி பறிபோனதற்கு அவருக்கு எதிரான அப்போதைய ஊழல் குற்றச்சாட்டுக்கள் மிகவும் முக்கிய காரணம். மறுபுறமாக இப்போது, அப்படியாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக சுமத்தப்பட்ட பிணைமுறி ஊழல் குற்றச்சாட்டே அவருக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இங்கு இன்னுமொரு விசயமும் கூறியாக வேண்டும் அதாவது, இந்த பிணை முறிஊழல் விவகாரம் கிராமப்புற மக்களுக்கு சரியாக விளங்கவில்லையாம். அவர்களில் ஒரு பகுதியினர் இது ஏதோ ''வங்கிக் கொள்ளை'' என்று நினைத்துவிட்டார்களாம்.

## தமிழருக்கு எதிரான சிங்கள உணர்வு?

இவற்றை எல்லாம்விட இன்னுமொரு அரசியல்வாதி சொன்ன ஒரு காரணம் இங்கு பரவலாக எல்லாராலும் பேசப்படுகின்றது. அதாவது சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதால் ஐக்கிய தேசிய கட்சி ஐம்பதினாயிரம் சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளை இழந்துவிட்டது என்று அமைச்சர் திலக் மாரப்பன கூறியுள்ளார்.

இதற்கு நிகராக, ராஜபக்ஷ அவர்களுக்கு கிடைத்த வெற்றி, தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள மக்களின் துவேஷ உணர்வைக் காண்பிக்கின்றது என்று தமிழ் தரப்பில் சிலர் வாதாடுவதையும் காணக்கூடியதாக் இருக்கின்றது.

இவை இரண்டையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்க வேண்டியிருக்கிறது. இவை இரண்டும் முட்டாள்தனமான காரணங்களே. முதலில் சொன்னவர் சிங்கள அமைச்சர், அடுத்த கருத்து பொதுவாக புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்களால் கூறப்படும் கருத்து.

இவை இரண்டுமே பிழையான வாதங்கள், வாக்களித்த மக்கள் யாராக இருந்தாலும் அவர்களின் உணர்வுகளை சரியாக புரிந்துகொள்ளாமல் அல்லது புரிந்துகொள்ள மறுத்து கூறப்பட்ட காரணங்கள் இவை.

நான் முன்னர் சொன்னது போல ராஜபக்ஷ அவர்களுக்கு ஆதரவாக விழுந்த வாக்குகள் அனைத்தும், தமக்கு எந்த விதமான வளர்ச்சித்திட்டங்களும் கிடைக்கவில்லை, பொருளாதார ரீதியில் தாம் பாதிக்கப்பட்டோம் என்பவற்றை மாத்திரம் மனதில் வைத்து சிங்கள மக்கள் அளித்த வாக்குகளே ஒழிய, இதில் தமிழ் மக்களுக்கு எதிராகவோ அல்லது சாதகமாகவோ கூட அவர்கள் எதனையும் கருத்தில் கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. தமது வயிற்றில் அடிபடுகின்ற போது ''எதுவும் செய்யாமல் இருப்பவரை விட ஏதாவது செய்பவரே மேல்'' என்று அவர்கள் அளித்த வாக்குகளே அவை.

தொடர்ச்சி... (பக்கம்-03)



02 பக்க தொடர்ச்சி

## தமிழருக்கு எதிரான சிங்கள உணர்வு எந்த பங்களிப்பையும் செய்யவில்லை

### சிறுபான்மையினரை புறக்கணித்தல்

இவை எல்லாவற்றையும் விட அடுத்து மஹிந்த தரப்பில் யாராவது ஆட்சிக்கு வந்தால் கூட அவர்கள் மீண்டும் சிறுபான்மையினருக்கு எதிராக விஷமப் பிரச்சாரங்களை செய்து சிங்கள மக்களை கவர்ந்து ஜனாதிபதியாகிவிடுவார்கள் அல்லது நாடாளுமன்றத்தை கைப்பற்றிவிடுவார்கள் என்று சிலர் கருதுகிறார்கள்.

அவர்கள் ஒரு விசயத்தை கவனிக்க தவறிவிட்டார்கள். அதாவது, மஹிந்த ராஜபக்ஷ அணியினர் இந்த தேர்தலில் முன்னணி பெற்றாலும் கூட அவர்கள் எடுத்தது கிட்டத்தட்ட 45 வீதம் வாக்குகளே. அதாவது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவு இல்லாமல் அடுத்து வரும் தேர்தல்களில் 51 வீத வாக்குகளை பெற முடியாது. அப்படியான சூழ்நிலையில் அவர்களால் ஒருவேளை நாடாளுமன்றத்தை கைப்பற்ற முடியுமே ஒழிய ஜனாதிபதியாக வருவது சிரமம். ஆகவே எந்தக் கட்சியானாலும் இனிமேல் , இந்த தேர்தல் முறையின் கீழ் சிறுபான்மை மக்களை எதிர்த்துக்கு கொண்டு எதனையும் செய்ய முடியாது. ஆனால், கடந்த காலங்களைப் போல அவர்களை ஏமாற்றி எதுவும் செய்யலாம். அதற்கு மக்கள் தயாராக இருந்தால் போதுமானது.





# யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் தமிழ் அரசியல் கட்சிகளின் சிந்தனையில் மாற்றம் அவசியமா?

யுத்தத்தினால் தமிழ் சமூகம் பல வழிகளில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கல்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி, தொழில் வாய்ப்புக்களில் ஏற்பட்ட இழப்புக்கள், வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டமை அல்லது சேதமாக்கப்பட்டமை, புலம்பெயர்வு என்பன அவற்றில் முக்கியமான காரணிகளாகும்.


புலம்பெயர்வு தவிர்ந்த ஏனைய மூன்று விடயங்களிலும் தமிழ் மக்கள் இழந்த எழுச்சியை மீட்டெடுப்பதற்கு தமிழ் மக்களின் அரசியல் சொத்து சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

ஆனால் இவ்விடயத்தில் வடக்கு மாகாணம் நடந்து கொள்ளும் முறையும் அண்மையில் பதவிக்காலம் முடிவுற்ற கிழக்கு மாகாண சபை நடந்து கொண்ட விதமும் தமிழ் மக்களுக்கு பாரிய ஏமாற்றத்தினையே ஏற்படுத்தியுள்ளன. ஏனெனில் தமிழ் அரசியல் என்பது தேசிய அரசியல் பிராந்திய அரசியல் என்னும் பாகுபாட்டினைக் கொண்டிராமல் எல்லோரும் தேசிய அரசியல் பேசி தமிழ் மக்களை மேலும் மேலும் காத்திருக்கக் கூறுவது தமிழினத்தினை பாரிய பின்னடைவுக்குள் தள்ளப்போகின்றது.

நிரந்தர தீர்வுக்கு உழைக்கும் அதேவேளை தமிழ் மக்களின் நாளாந்தப் பிர்சினைகளை மிகக் குறுங்காலத்தில் தீர்ப்பது எப்படி என்பதை பலம் பொருந்திய தமிழ் அரசியல் கட்சிகள் புரிந்து கொள்வது போல் தெரியவில்லை.

கல்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி எத்தகையது அவற்றினை தீர்க்கும் வழிகள் எவை? தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகளிடையே காணப்படும் வேலையின்மையின் தீவிரத்தன்மை யாது? யுத்தகாலத்தில் அழிக்கப்பட்ட வீடுகள் எத்தனை, பாரிய உதவிகளுக்காகக் காத்திருக்கும் விதவைகளின் எண்ணிக்கை யாது? என்பன போன்ற கேள்விகளுக்கு பலம் பொருந்திய தமிழ் கட்சிகளிடையே விடையிருப்பதாகத் தோன்றவில்லை. இதற்காக அவர்கள் துறைசார் விற்பன்னர்களை நாடியதாகவும் தகவலில்லை.

## வீழ்ந்துபோன கிழக்கு மக்கள் பொருளாதாரம்





### வெளிநாட்டு ஆசை

யுத்தகாலத்திற்குப் பின்னரும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் காணப்படும் மற்றுமொரு மனப்பாங்கு கல்வியில் கவனம் செலுத்துவதை விடுத்து பாரிய இடர்களை எதிர்நோக்கி எப்படியாவது வெளிநாடு சென்றுவிட வேண்டும் என்பதாகும். ஒரு இளைஞன் மேற்குலக நாடு ஒன்றுக்கு புலம் பெயரும் போது அவருக்கு வாழ்க்கைத் துணையாக இங்கிருந்தே ஒரு யுவதியும் செல்லும் நிலை ஏற்படுகின்றது.

தமிழ் இளைஞர்களுக்கு போதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கத் தவறிய தமிழ் அரசியல் தலைமைகளும் இப்பிரச்சினைக்குப் பொறுப்புக் கூறவேண்டியவராவர். குறிப்பாக மூவினங்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னர் கூட தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தி மட்டம் ஏனைய இன மக்கள் வாழும் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையில் காணப்படுவது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

தமிழ் மக்களை அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்தும் காத்திருக்குமாறு தமிழ் அரசியல் கட்சிகள் வேண்டுவது தற்போதைய நிலையில் நீண்ட காலம் தாக்குப்பிடிக்கக் கூடிய தந்திரோபாயமாகத் தென்படவில்லை. தீவிரமான பிரச்சினைகளை குறுங்காலத்தில் தீர்க்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து செயற்படுத்துவதுடன் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினைக் காண்பதற்கு உழைத்தல் என்பதனை ஒரு நீண்ட காலப்பிரச்சினையாகக் கருதிச் செயற்படவேண்டும். திருவிழாக் காலங்களில் கடைவிரிக்கும் வியாபாரிகள் போல் தேர்தல் காலங்களில் மட்டும் அரசியல் பேசி வாக்குச் சேகரித்து விட்டு, அடுத்த தேர்தல் வரும்வரை மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைப்பற்றி கணக்கெடுக்காமல் இருப்பது தமிழினத்துக்கு மாபெரும் இன்னல்களை ஏற்படுத்தும் என்பதை அரசியல் கட்சிகள் உணர்ந்து செயற்படவேண்டும்.





**அரசியல் தீர்வு கிடைக்கும் வரை காத்திருக்கச் சொல்வது தந்திரோபாயமான பொருளாதார யுக்தி அல்ல**













~~
பேராசிரியர்
கோ. அமிர்தலிங்கம்
பொருளியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்
~~

**இனியும் வெளிநாடு நோக்கி ஓடும் இளைஞர் சக்தியின் இழப்புக்கு அரசியல் கட்சிகளே பொறுப்பேற்க வேண்டும்**

# 'வளர்ச்சியே எங்கள் முதல் தேவை என்கின்றனர் கிழக்கு மக்கள்'

தொடர்ச்சி...

த. கைலாயபிள்ளை

அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பொருளாதாரம் முற்றாக நலிவுற்றுப்போயுள்ளதாக கூறும் அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் கூட்டமைப்பு மற்றும் இந்து சம்மேளனம் ஆகியவற்றின் தலைவரான த. கைலாயபிள்ளை, 'இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்றவை தேவைதான் ஆனால், தமது மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்திதான் முதற்பிரச்சினை' என்கிறார்.

**தமிழர்களின் நிலம் சுரண்டப்படுவதாக கவலை**

ஏனைய இனங்களால் தமது மாவட்டத்தில் தமிழர்களின் நிலம் சுரண்டப்படுவதாக கவலை வெளியிட்ட அவர், 'அரசியல் பேரம் பேசலுக்காக தேசிய மட்டத்தில் உள்ள கட்சிகளும் தமிழ் கட்சிகளும் தமது மாவட்ட தமிழரை பலிகொடுக்கக் கூடாது' என்று குற்றஞ்சாட்டுகிறார்.

வடக்கில் அல்லது வேறு மாவட்டங்களில் வேண்டுமானால் நிலைமை வேறாக இருக்கலாம், ஆனால் அம்பாறையில் தமிழரின் முதற்தேவை பொருளாதார முன்னேற்றமே என்கிறார் அவர். அதேவேளை தமிழர் கட்சிகளின் நழுவல் போக்கு தொடர்ந்தால் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் முற்றாக அழிந்துபோகும் நிலை ஏற்படும் என்றும் அவர் வேதனை வெளியிட்டார்.



பொறுத்தவரை தமிழ் கட்சிகள் இணைந்து செயற்பட்டு இங்குள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயலவேண்டும் என்பதே இங்குள்ள சாதாரண மக்கள் மற்றும் கல்வியாளர்களின் கருத்து என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருநாவுக்கரசு கோபகன்

'இதுவரை காலத்தேர்தல்களை தேசிய இருப்புக்கான ஒரு தேர்தல்களாக காண்பித்துவந்த தமிழ் தரப்பு அரசியல் கட்சிகள், சர்வதேசத்துக்கான ஒரு செய்தியை சொல்பவையாக அவற்றை காண்பித்து வந்தன. அந்த தேவை இருக்கத்தான் செய்கிறது' என்று கூறிய அனல்மின் நிலையத்துக்கு எதிரான போராட்டங்களில் முன்னணி வகித்த பசுமைத் திருகோணமலை அமைப்பைச் சேர்ந்த திருநாவுக்கரசு கோபகன், சம்பூர் மீட்பு போராட்டங்களிலும் கணிசமான பங்களிப்பை செய்தவர்.

ஆனால், ஒரு நாட்டின் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்காக ஒதுக்கப்படும் நிதியை பொதுமக்களின் நலன்சார் திட்டங்களுக்கு கொண்டு சேர்ப்பதில் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்கள் சரியாக செயற்படவில்லை என்று கூறும், அவர் இதனால், கிழக்கு

**ஒரு முறுகல் நிலைக்கு தமிழர்களை கொண்டு செல்லும் ஆபத்தை ஏற்படுத்திவிடும்**

மாகாணத்தில் ஏனைய இனங்களுடன் ஒப்பிடும் போது தமிழ் மக்கள் மிகவும் பின்னடைந்த நிலையில் இருப்பதாக குறிப்பிடுகின்றார்.

இது ஏனைய இனங்களுக்கு எதிரான ஒரு முறுகல் நிலைக்கு தமிழர்களை கொண்டு செல்லும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்றும் அவர் எச்சரிக்கிறார்.

**இங்கு தமிழ் கட்சிகள் இணைந்து பணியாற்றினால் மாத்திரமே பலமாக தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்**

ஏதோ தமது செயற்பாடு எல்லாம் உரிமைப் போராட்டத்துக்குத்தான் என்று கூறிக்கொள்ளும் தமிழ் அமைப்புக்கள் அபிவிருத்தியின் பக்கம் திரும்பிப் பார்க்காமல் இருப்பது பெரும் குற்றம் என்கிறார் அவர். உள்ளராட்சி தேர்தலில் பங்கேற்றுவிட்டு அபிவிருத்தியில் சம்பந்தப்படமாட்டேன் என்பது ஒரு வன்முறைக்கு சமம் என்கிறார் அவர்.

அனைத்து தரப்பும் தமிழ் மக்களின் பகுதிகளுக்கான அபிவிருத்தியில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழர் இனப்பிரச்சினை தீர்வுக்கான போராட்டம் என்பது ஒருபுறம் இருந்தாலும் அபிவிருத்தி என்பது கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை தமிழ் மக்களின் உடனடி அவசரத் தேவையாக இருக்கின்றது என்பது இங்கு அனைத்துத்தரப்பினதும் கருத்தாக இருக்கின்றது.

பல இனங்கள் வாழும் ஒரு பகுதியில் அபிவிருத்தியின்றி தமிழ் மக்கள் கீழ் நிலைக்கு தள்ளப்பட இவர்களின் பொறுப்பற்ற செயற்பாடே காரணம் என்று கூறி, அவர்கள் தமிழ் கட்சிகள் மீது கடுமையான கோபத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

சுபா சக்கரவர்த்தி

தமது பகுதி மக்களின் முதல் தேவை அபிவிருத்தியே என்று கூறுகின்ற மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுபா சக்கரவர்த்தி அவர்கள், அதற்காக தமிழ் கட்சிகள் அனைத்தும் பேதத்தை மறந்து இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்கிறார்.

கிழக்கு மாகாணத்தின் நிலைமைகளை கொண்டு பார்க்கும் போது இங்கு தமிழ் கட்சிகள் இணைந்து பணியாற்றினால் மாத்திரமே பலமாக தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

தேசியக் கட்சிகள் எப்போதும் சிறுபான்மைக் கட்சிகள் பலமடைவதை விரும்பாது என்று கூறும் சுபா சக்கரவர்த்தி அவர்கள், ஒரு காலத்தில் பலமாக திகழ்ந்த முஸ்லிம் காங்கிரஸ் இன்று பின்னடைந்ததற்கு அதில் ஏற்பட்ட பிளவுகளே காரணம் என்கிறார். உண்மையில் கிழக்கு மாகாணத்தை







## ஆட்கள் தேவை

எமது நிறுவனத்தின் பத்திரிகை மற்றும் வானொலியில் பணியாற்ற ஆர்வம் உள்ளவர்கள் தேவை.

முழுநேர மற்றும் பகுதி நேர பணியாளர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

பத்திரிகையில் செய்தி சேகரிப்பு, செய்தித்தொகுப்பு மற்றும் பக்க உருவாக்கம் ஆகியவற்றில் அனுபவம் உள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள். அனுபவம் இல்லாதவர்கள் பயிற்சியாளர்களாக கற்றுக்கொள்ளவும் முடியும். ஆனால், ஆர்வம் அவசியம்.

அதேபோன்று வானொலித் தயாரிப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சி வழங்குனர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு :
அரங்கம் நிறுவனம்,
227 பார் வீதி மட்டக்களப்பு.

தொலைபேசி :
070 345 68 00




# கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத பெண்ணுரிமை!

**கடும் கோபமடைந்த பெண்கள் அமைப்புக்கள்**

நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் அறிமுகமான பெண்களுக்கான 25 வீத உறுப்பினர் ஒதுக்கீடு இங்கு மீண்டும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

சட்டம் ஒவ்வொரு சபையிலும் பெண்களுக்கு 25 வீதமாவது பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று கூறினாலும், நடைமுறையில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக அரசியல் கட்சிகள் அதனை தவிர்ப்பதற்கு முயற்சிப்பதாக கூறி இங்கு பெண்கள் குழுக்களும் பொது அமைப்புக்களும் போர்க்கொடி உயர்த்தியுள்ளன. பெண்களுக்கு 25 வீத பிரதிநிதித்துவத்தை வழங்குவது ஒரு "நியாயமற்ற பாரம்" என்று அரசியல் கட்சிகள் கருதுவதாகவும், அதற்காக இதில் மாற்றத்தை கொண்டுவருவது தொடர்பாக அவர்கள் தேர்தல் ஆணையம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுடன் அதிகப்படாத உறுப்பினர்களையும்

பெற்ற கட்சிகளும் பெண்களுக்கென்று உறுப்பினர்களை ஒதுக்க வேண்டியதில்லை.

இதன் காரணத்தினால் இரண்டாவது நிலையில் உள்ள கட்சிகள் மீதே 25 வீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான பொறுப்பு சுமத்தப்படும். இதனை அவர்கள் சுமையாகப் பார்க்கிறார்கள். இந்த நிலையிலேயே அவர்கள் இந்த ஒதுக்கீட்டு வீதத்தை குறைக்க முயற்சிக்கிறார்கள்.

**கொழும்பு மாநகர மேயர் றோசி சேனநாயக்கா**

உண்மையில் இந்த வகையில் பார்க்கப்போனால் இரண்டாவது நிலையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி மீதே என்பது சட்டம் என்று கூறும் அவர், அதனை அமல்படுத்தியாக வேண்டும் என்கிறார். அதேவேளை, அதனைஅமல்படுத்துவதில் நடைமுறையில் ஏற்படக் கூடிய சிக்கல்களை களைய ஏனைய அரசியல் கட்சிகளும் உதவ வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

தலைவரான மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்கு கூறியுள்ளார்.

சட்டத்தில் இருக்கும் ஒரு இடைவெளி காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறும் அவர், வடக்கு கிழக்கில் குறைந்தது பத்து உள்ளூராட்சி சபைகளிலாவது, பெண்களுக்கு 25 வீதமான இடங்களை ஒதுக்க முடியாத




# உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு 25 வீத உறுப்புரிமை சட்டச் சிக்கலாம் இழுபடுகிறது

தொடர்பு கொண்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டும் பெண்கள் அமைப்புக்கள் இவை தமக்கு பெரும் கவலையை தந்திருப்பதாக கூறுகின்றன.

ஆனால், பலவிதமான நீண்டகால போராட்டத்துக்கு பின்னர் தாம் பெற்ற 25 வீத உரிமையை தாம் விட்டுக்கொடுக்க முடியாது என்று பெண்கள் அமைப்புக்கள் கூறுகின்றன.

இலங்கையில் பலம் மிக்க சில பெண்கள் குழுக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து இது தொடர்பாக தேர்தல் ஆணையருக்கு, கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்கள். அதில் 25 வீத ஒதுக்கீட்டுக்கான சட்டத்தை உடனடியாக அமல் படுத்துமாறு அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

இந்த தேர்தலை பொறுத்தவரை இங்கு அமையக் கூடிய அனைத்து சபைகளிலும் 25 வீதத்துக்கு குறையாத பெண்கள் உறுப்புரிமை இருக்க வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது. ஆனால் நடைமுறையில் இரண்டு வழிகளில் அங்கு சிக்கல் வந்திருக்கிறது.

அதாவது நேரடியாக வட்டார முறையின் கீழ் பெரும் எண்ணிக்கையில் உறுப்பினர்களை பெறும் கட்சிக்கு விகிதாசார தேர்தல் கணிப்பீட்டு முறையில் உறுப்புரிமை கிடைக்காமல் போனால், அவர்கள் 25 வீத ஒதுக்கீட்டை பூர்த்தி செய்ய முடியாமல் போகலாம். மறுபுறம் மிகக்குறைவாக 20 வீதத்துக்கு குறைவான வாக்குகளையும் 3க்கு

பெரும்பாலான இடங்களில் இந்த பொறுப்பு சுமத்தப்படலாம் என்று பார்க்கப்படுகின்றது. ஆனால் அந்த கட்சியின் சார்பில் தலைநகர் கொழும்பின் மாநகர சபைக்கு முதல் தடவையாக மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பெண்ணான றோசி சேனநாயக்கவும், பெண்களுக்கு உரிய 25 வீத ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்துங்கள் என்று கேட்டிருக்கிறார்.




பெண்களுக்கான குறைந்தபட்சம் ஒதுக்கீட்டை கொண்டு வருவதற்கான சட்டத்துக்காக போராடியவர்களில் தானும் ஒருவர் என்ற வகையில் இதனை வலியுறுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

**தேர்தல் ஆணைய உறுப்பினர்**

இலங்கை தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்களில் ஒருவர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல். பெண்களுக்கு குறைந்தபட்சம் 25 வீதமாவது உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும்

**ஷெரீன் சரூர்**

இந்த விசயத்தில் தேர்தல் ஆணையரும், அரசியல் கட்சிகளும் இணைந்து பெண்களின் உரிமையான 25 வீத உறுப்புரிமைனயை உறுதி செய்ய வேண்டும் என்று கூறுகிறார், இது தொடர்பில் வெளியான பெண்கள் மற்றும் பொது அமைப்புக்களின் அறிக்கையில் கையெழுத்திட்டுள்ள சமூக செயற்பாட்டாளரான ஷெரீன் சரூர்.

இந்த இழுபறியால் பல சபைகளில் மொத்த உறுப்பினர்கள் யார் யார் என்று இறுதி செய்ய முடியாமல் இருப்பதாக இங்கு சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பெண்களுக்கான ஒதுக்கீட்டு விவகாரம் சபைகளை கூட்டுவதற்கு தடையாக இருப்பதாகவும் சில வர்ணித்துள்ளன. வேறு சில பத்திரிகைகளோ ஸ்தம்பித நிலையை தவிர்க்க பெண்களின் உறுப்புரிமையை குறைக்க சட்டத்தில் மாற்றம் தேவை என்றும் கூறுகின்றன.

ஆனால், பெண்களோ தாம் போராடிப் பெற்ற குறைந்தபட்ச 25 வீத உறுப்புரிமையை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்கிறார்கள்.

**தேர்தல் ஆணையர் கைவிரித்தார்**

இதற்கிடையே இறுதியாக கிடைத்த தகவல்களின்படி, இந்த விசயத்தில் தம்மால் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின்

நிலை ஏற்பட்டுள்ளதாக கூறுகிறார். இதில் அரசியல் கட்சிகளாக பார்த்து ஏதாவது செய்தால்தான் உண்டே தவிர, தமக்கு எதுவும் முடியாது என்றும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் பல சபைகளில் முன்னிலை பெறுகின்ற அமைப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பு. உண்மையில் இந்த வகையான முடிவுகளால் தாம் குழம்பிப் போயுள்ளதாக அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரான துரைராசசிங்கம் கூறுகின்றார். 'விகிதாசார அடிப்படையில் வேண்டுமானால் முற்றிலும் பெண்களை நியமிக்க முடியும், ஆனால், நேரடியாக வட்டார அடிப்படையில் வென்ற உறுப்பினர்களை அந்த இடங்களை விட்டுக்கொடுக்கும்படி கேட்கமுடியாத நிலை இருப்பதாக' அவர் கூறுகின்றார். அதற்கான அதிகாரங்கள் தமக்கு இருக்கிறதா என்பது கேள்விக்குறியே என்று கூறும் அவர், இவை குறித்து தாம் தொடர்ந்து ஆராயவிருப்பதாக கூறினார்.

உண்மையில் இங்கு புதிதாக வந்த உள்ளூராட்சி சபை தேர்தல் சட்டத்தில் உள்ள சில குறைபாடுகள்தான் பிரச்சினையை உருவாக்கியுள்ளன. பல நீண்டகால போராட்டத்துக்கு பிறகு தமக்கு கிடைத்த ஒரு உரிமையை முழுமையாக பயன்படுத்த முடியவில்லையே என்ற கோபத்தில் பெண்கள் அமைப்புக்களும், அவர்களுக்கு ஆதரவான பொது அமைப்புக்களும் இருக்கின்றன.

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

### மட்டுநகர் மண்ணைத்தொட்டு

ஒரு காலத்தில மட்டகளப்பெண்டா ஏதோ கண்ணுக்கு எட்டாத தொலைவில கிடக்கிற காட்டூர் எண்டுதான் நினைச்சன். ஆனா எங்கட அம்மா சொல்லுவா "மட்டக்களப்பெண்டா எது? பெரிய பெரிய மந்திர வாதியள் இருக்கிற ஊர். அங்கபோனா இருக்கப் பாய் போடுவினமாம். பாத்தா பாயோட ஒட்ட வெச்சிடுவாங்களாம்"

"அதெப்பிடி பாயோட ஒட்டவெக்கிறது" எனக்கு விளங்கயில்லை. ஆனா நான் நினைச்சன் உந்த வேப்பம் பிசினக் கொணந்து. பாயில ஊத்திக் காய வைச்சிட்டு ஆக்கள வரக் கொண்டே விரிக்கிறதாக்கும் எண்டு. எங்கட சித்திஒராளுக்கு, இது உங்களுக்கு விளங்க வேணுமெண்டதுக்காகத்தான் சித்தி எண்ணுறன் நாங்கள் அவாவ கூப்பிடுறது "சீனியாத்தை" எண்டுதான். அம்மாவுக்கு ரெண்டு தங்கச்சிமார், அவையளக்கூப்பிட ரெண்டு மூண்டு முறை வைக்கத்தானே வேணும். முதல் தங்கச்சி "குஞ்சியாத்தை". ரெண்டாவது "சீனியாத்தை," மூண்டாவது இருந்திருந்தா "ஆசையாத்தை" எண்டு வைச்சிருப்பம். பக்கத்து வீட்டில பொன்மணியாக்கள் அப்பிடித்தான் கூப்பிடுகினம்.

அப்ப எங்கட கிராமத்தில ஒரு பெரியவர் இருந்தார். அவரை நாங்கள் மட்டுமல்ல ஊரில உள்ள எல்லோருமே மட்டக்களப்பப்பா" எண்டுதான் கூப்பிடுறது. நல்ல உயரமான மனிதர். நெற்றியில

## "மட்டு நகருலவும் இளந்தாரிமார் வந்தார்..."

ஓவல் சேப்பில விபூதிப்பட்டை. வெள்ளை வேட்டி சால்வை. எப்பவும் முகத்தில தெரியிற புன்சிரிப்பு. இவர் எந்த வேலைக்கும் போய் நான் பாத்ததில்லை. "கட்டைப்பிரம்மச்சாரி" எண்டுதான் அப்பு சொல்லுவார். "அதென்னப்பூ கட்டைப்பிரமச்சாரி அவர்தான் நல்ல உயரமா இருக்கிறாரே" எண்டு நான் கேட்டா,

"உனக்குதுகள் விளங்காது" என்பார். அதுக்குமேல கேக்க எங்களுக்கும் பயம். ஊருக்குள்ள ஆருக்கும் முறைக்காச்சல் (ரெண்டு நாளைக்கொருக்கா மூண்டு நாளைக்கொருக்கா எண்டு முறை வச்சு வாறதால அதுக்கு முறைக்காச்சல் எண்டு பேர். அதோட குளிர் உலுப்பினா அதை குலைப்பன் காச்சல் எண்டும் சொல்லுவினம் இது மலேரியா எண்டது பிறகு வந்த கதை) வந்திட்டா மட்டக்களப்பப்பாவிட்டதான் கொண்டு போவினம் அவர் காச்சலுக்கு, சுளுக்குக்கு, காடு கரம்பைவழிய போய் ஆரும் பயந்து வந்தா எல்லாத்துக்கும் மந்திரிச்சு நூல்கட்டிவிடுவார். பேயோ, நோயோ எதுகும் அவற்ற மந்திரக்கட்டுக்கு வாலாட்டேலாது.

இந்த சந்தர்ப்பத்திலதான் எங்கட சீனியாத்தைக்கு ஒரு மாப்பிளை தேடி மட்டக்களப்புக்குப் போறார் அப்பா. அப்ப அப்பா என்றால் பேரன் என்று பொருள் தகப்பனை "அப்பு" அல்லது "ஐயா" என்றுதான் அழைப்பதுண்டு. போன மனிசன்

மகளுக்கு ஒரு மாப்பிளையை எடுத்ததோட வராம, தனக்கும் ஒரு பொம்பிளையைக் கொணந்திட்டார். நல்ல வடிவான வெள்ளை மனிசி. சுளுசைக் வெள்ளையில்லை அது எலுமிச்சம்பழ நிறம். கையோட ரெண்டு பிள்ளையளும் ஆண் ஒண்டு மற்றது கைக் குழந்தை பொம்பிளப்பிள்ளை. பாவம் புரியன் செத்துப்போக தம்பியாற்ற ஆதரவிலதான் இருந்தவவாம். இப்ப தம்பியார் வன்னிக்கு வர அவவையும் கூட்டிக்கொணந்திட்டார்.

அதோட ஊருக்கை எங்கட அப்பாவுக்கு ஒரு பட்டப்பேர் வந்திட்டுது கண்டோட மாடு அவுட்டதெண்டு. ஆனா என்ன எங்களுக்கு பெத்தாச்சியா வந்த அவவில சரியான விருப்பம். நல்ல ருசியா சமைப்பா, அன்பா கதைப்பா, உந்த புராண இதிகாசகதையளும் உபகதையளும் அவவுக்கு அத்துப்படி. இனி அவயட பக்கத்தில பாடுற பாட்டுகள் எல்லாம் பாடுவா. இது எங்கட அம்மாவுக்குப் பிடிக்காது மனிசி தெம்மாங்கு பாடுதெண்டு ஒரே குறை. மட்டக்களப்புச்சனம் உந்த உபசரிக்கிறதில வலு கெட்டிக்காறர். பண்பாடு பழக்கவழக்கங்களும் அந்த மாதிரித்தான். வேலைவெட்டியிலும் ஆரும் கிட்ட நிக்கஏலாது. அவ்வளவு துரிதம் அவ்வளவு சுத்தம்.

அரிவி வெட்டுக்காலத்தில் மழை இந்தா அந்தா எண்டு போக்குக் காட்டும். வெள்ளாமையும் திறமான விளைச்சலெண்டா கதிர் கனதியில விழுந்து படுத்திடும். வன்னியிலயும், மன்னாரிலயும் அரிவி வெட்டுக்கு ஆள் பிடிக்கிறதில, கொழுத்தாடு பிடிப்போம் கொள்ளியால சுடுவோம்"எண்டு பெரிய அக்கப்போராயிருக்கும். இப்பபோல அப்பயென்ன மிசினே அண்டைக்கு வெட்டி அண்டைக்கே வீட்டுக்கு நெல்லைக் கொண்டேப்போட, எத்தினை ஏக்கரெண்டாலும், கையில பிடிபிடியாப் பிடிச்சுத்தான் வெட்டவேணும்.

பிறகு அள்ளிக்கட்டவேணும் அதை காத்துக்காலம் வருந்தனைக்கும் கொண்டே சூட்டில வைக்கவேணும். பிறகும் ஆனைக்கும் பண்டிக்கும். காவலிருந்து வைகாசிக் காத்தெழும்ப, மாடுகட்டி போரடிச்சு, நெல்குவிச்சு, காத்தில பதரை தூத்திவிட்டு கொண்டுவந்து குதிரில கொட்டி வைக்குந்தனைக்கும் மனித முயற்சிதான்.

அவ்வளவு காணியும் வேலையொதுக்கி




அதுக்கும் பிறகு வன்னிக்கும் வந்து வாடி போட்டு தங்கியிருந்து நெல்லு வெட்டுறது மட்டக்களப்பு இளந்தாரியள்தான். கூடவே ரெண்டொரு பெரிய கிழடுகட்டையளும் வருவினம் இவை வாடியில சமைக்கக்கொள்ள வேலை செய்யிறவைக்கு குடிதண்ணி அள்ளக்கொள்ள நிப்பினம். "மட்டக்களப்பு டீம்" வந்திருக்காம் வெட்டுக்கெண்டா எங்கட ஊரே கலகலக்கும்.

"அவங்கட கத்திக்கு கிட்ட நிக்கேலாது" என்பவையும்,

"மூண்டு வீச்சில ஒரு உப்பட்டி விழுத்திறாங்களப்பா"எண்டு வியக்கிறவையும். அவங்கட கத்திய வியந்து பாடுற அளவில யெண்டாப்பாருங்கவன்,

"மட்டுக்கருக்கால அரிவாளைத்தீட்டி
மாவிலங்கம்பிடி தன்னில் இறுக்கி
வெட்டும் பிடியை சிறக்கவே வெட்டி
வெள்ளித்தகட்டாலே விரல்கூட்டமிட்டு
மட்டு நகருலவும் வாளிளந்தாரிமார்
நிலையாமல்விளையருவி
விளையாடினாரே"

மட்டக்களப்பு "டீம்" எதிலயும் எப்பவும் சோடை போனதில்லை. காடு மேடு கரம்பை எதுகும் அவங்களை தடுக்க முடியாது. பாச்சல்தான். அதைப்பத்தி பொறவு பேசலாம.ளு தொடரா எழுதத்தானே போறன். கொஞ்சம் விலாவாரியாப் பேசுவம.ளு பேசலாம்.

மாதாங்கமக்கா, எங்கட ஊருக்கு எழுவதாம் ஆண்டு வந்த மனிசி. மனிசி எண்டிறது பிழைதான். அந்த பொம்பளை நாலு ஆம்பளைக்கு சமம். அவவும் சொல்லி வைச்ச மாதிரி எலுமிச்சம் பழம்போல வடிவுதான் சுருண்ட தலைமயிர. அள்ளிமுடிச்ச கொண்டை. ஒருநாளும் பாவாடை கட்டமாட்டா உள்ள ஒரு சித்தாடைத்துண்டைக்கட்டி அதுக்கு மேல சேலையச் சுத்தி வலதுபக்கமா தாவணி போடுவா. அந்த நாளையில மட்டக்களப்பு பொண்டுகள் வலதுபக்கமா தாவணி போடுறவை அதிகம்.

"இவா மட்டக்களப்பில வேலைக்குப்போய் நிண்ட ராசுப்பிள்ளையோட கூடி ஓடிவந்திட்டா"எண்டுதான் ஊருக்கை கதை . ஆனா ராசுப்பிள்ளையக் கேட்டா அவளின்ர சமையல்ல சொக்கிப்போய்த்தான் அவளைக் கிளப்பிக் கொணந்த நான் என்பார். ஏன்னைக்கேட்டா நான் அவவின்ர கொஞ்சுதமிழ் பேச்சிலயே ராசுப்பிள்ளை விழுந்திருப்பார் எண்டுதான் சொல்லுவேன். ஒரு வஞ்சகம் சூதில்லாத பொம்பிளை எனக்கு மட்டக்களப்பின்ர சிறப்பை சொல்லிச் சொல்லியே என்னையும மயக்கப்பாத்தா.

"பிள்ளோய், கைகாலச் சும்மா போட்டு வெக்காம ஒழைக்கோணும் மகள்." என்பாள்..

"எங்க தங்கமக்கா மாடுமாதிரி பாடுபட்டாலும் கையில ஒண்டும் மிஞ்சுதில்லையே" என்றால்,

"எதுக்குப்பிள்ளை மிஞ்சணும். அண்டண்டு பசித்தில்லாம சப்பிடணும் பிள்ளை அவ்வளவும்காணும்," என்பார்.

ஒருபோதும் கூலிவேலைக்குப் போகமாட்டார். பொருத்த வேலைதான். ஒரு ஏக்கர் வயலை நாலே நாளில் வெட்டி கட்டக்குடுத்திடுவார். சாதாரணமாக அது எட்டுக்கூலி பிடிக்கும் வேலை. அப்படி உழைத்தாலும, எதையும் சேர்த்து வைக்கவில்லை அவர் சேர்த்ததெல்லாம் நான்கு ஆண்மக்களும் இரண்டு பெண் பிள்ளைகளும்தான் ஒருகட்டத்தில் கணவன் இறந்து போனதும் மணமான ஆண்மக்கள், தாம் தமது மனைவி மக்களுடன் ஒதுங்கியபின்னர் ஒரு பெண்பிள்ளையே அவரை தன்னுடன் வைத்திருக்கிறார்..

நாங்களும் வாழும் காலத்தில் சேத்து வைக்கிறது இயலாத காலத்திலும் உதவும் எண்டது மட்டுமில்ல பொருள் எண்டது எவருக்கும் இந்தக்காலத்தில தேவைதான் எண்டதை மறுதலிக்கிற குணம் இண்டைக்கு மட்டக்களப்பின் மக்களை தள்ளி விழுத்திக் கொண்டிருக்கிது. அயலில் உள்ளவர்களை சவாலாக எடுத்துக் கொண்டு முன்னேற என்ன தடை எண்டது விளங்கேல்ல. (பாப்பம்)

~~ தமிழ்க்கவி ~~



குமாரத்தனும் குமாரத்தன் சடங்கும், மட்டக்களப்பில் வாழ்ந்த பூர்வீக குடிகளின் தெய்வங்களும் வழிபாடுமாகும். இன்றும் மட்டக்களப்பின் பூர்வீக குடிகளிடம் இவ்வழிபாட்டு முறை நிலவுகிறது. வேடர்களிடத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பிலுள்ள வேறு சில பூர்விக குடிகளிடத்தும் இவ்வழிபாட்டு முறை உண்டு.

இதனை மட்டக்களப்பில் நிலவுகின்ற வேட கலை, இராஜ கலை என்கிற வேறுபட்ட குமாரத்தன் வழிபாட்டு முறைகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பண்டைக்காலத்தில் மட்டக்களப்பில் பல்வேறு பிரதேசங்களிலும் குமார கோயில்கள் அமைக்கப்பட்டிருந்திருக்கின்றன.

(கருவேப்பங்கேணி) குமாரத்தன் கோயில், தற்போது முருகன் கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.

திருப்படைக் கோயில் எனச்சிறப்பிக்கப்படுகின்ற சித்தாண்டி முருகன் கோயிலின் தென் வெளிவீதியிலும் குமார் கோவில் உண்டு. இங்கும் பாரம்பரியான முறையிலமைந்த சடங்கு நடைபெற்று வருகிறது. மற்றொரு திருப்படைக் கோயிலான மண்டூர் முருகன் கோயிலில் பின்புறத்திலும் குமாரர் கோயிலுண்டு. இங்கு "வெறியாட்டு" எனும் சடங்கு நடைபெறுவதுண்டு.

இதனை விட மட்டக்களப்பு மாமேங்கேஸ்வரர் கோவிலை அண்டி, முன்னர் குமாரர் கோயில் இருந்தது எனவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில் அண்மையில்





மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கும் குமாரத்தன் தொடர்புண்டு

# மட்டக்களப்பின் பாரம்பரியம் கூறும் குமாரத்தன் வழிபாடு

## வேடரும் ஏனைய குடிகளும் குமாரத்தனை வணங்கினர்




இதனால் பண்டைக்கால மட்டக்களப்பில், குமாரத்தன் வழிபாடே பெருவழிபாடாக நிலவியிருந்திருக்கும் போலும். மட்டக்களப்பில் இன்று பெருவழக்கிலுள்ள ஏனைய வழிபாடுகள், மட்டக்களப்பில் குடியேறிய மக்களால் கொண்டு வரப்பட்ட வழிபாடுகளேயாகும்.

விடுவிக்கப்பட்டுள்ள வீமன்காமம் வடக்கில் உள்ள பிள்ளையார் கோவில், குமாரர் கோயில் எனக்குறிப்பிடப்பட்டிக்கிறது! இவற்றைவிட, குடும்பிமலைப்பிரசேத்திலுள்ள தடானையிலும் குமாரர் வழிபாட்டிடம் உண்டு. யுத்த காலத்தில் தடானையிலிருந்து இடம் பெயர்ந்தோரால் சித்தாண்டி, மாவெடி வெம்பு விநாயகர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நாகதம்பிரான் கோவிலிலும் குமாரர் கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கும் பாரம்பரிய முறையிலான சடங்கு நடைபெறுகிறது. மட்டக்களப்பு எல்லை வீதியிலமைந்துள்ள நரசிங்க வைரவ ஆலயத்திலும் குமாரருக்கு கோயிலுண்டு.

வடபிரதேசம் தனித்துவமான ஒரு பொருளாதார - சமூக - பண்பாட்டுப் பிரதேசம் என அடையாளப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. இப்பிரதேசம், கடந்த முப்பதாண்டு கால போராட்டத்தில் வகித்து வந்த பங்களிப்பும் பாத்திரமும் தனித்துவமானதே!

ஆய்வாளர்களும் வழிபடுவோர்களும் குமாரத்தனை முருகன் என்று அழைக்கின்றனர். குமாரத்தன் கோயில்கள் முருகன் கோயில்களுடன் தொடர்பு பட்டுமுள்ளன. குமாரத்தன் கோயில்கள் முருகன் கோயில்களாக மாற்றப்பட்டும் வருகின்றன. எனினும், குமாரத்தன் கோயிலில் உள்ள தனித்துவமான பரிவாரத் தெய்வங்கள் முருகனுடன் தொடர்பற்றவை. குமாரத்தன் சடங்கும் முருக வழிபாட்டு

ஒரு வரலாற்று மூலாதாரமாகவும் விளங்குகின்றது.

மட்டக்களப்பின் தனித்துவமான வராலற்று, சமூக, பண்பாட்டு அடையாளமாகவே குமாரர் வழிபாடு விளங்குகின்றது. மட்டக்களப்பின் தனித்தவத்தை அறிவதற்கான ஒரு வரலாற்று மூலமாக இவ்வழிபாட்டு முறை விளங்குகிறது.

குமாரத்தன் வழிபாடு பற்றிய ஆய்வுகள் மட்டக்களப்பு சமூகம் பற்றி மட்டுமன்றி, தமிழர் வழிபாடு பற்றிப் புதிய விடயங்களை தருவதொன்றாகவும் அமையலாம்.

~~ விஜய் ~~

### முருகன் வேறு குமாரத்தன் வேறு. ஆனால் அவை ஒன்றான கதைகளும் உண்டு

மௌனகுரு அவர்கள், தளவாய் குமாரர் கோயில் தாய்க்கோயில் என்கிறார். இங்கு நடைபெறும் சடங்குகள் பற்றி அவர் விரிவாக ஆராய்ந்து எழுதியுமுள்ளார். மகேஸ்வரலிங்கம், குமார வழிபாட்டு முறை மிக அண்மைக்காலம் வரை முறுத்தானை, களுவங்கேணி, தளவாய், கதிரவெளி முதலிய இடங்களில் நிலவியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தற்காலத்தில் மட்டக்களப்பில் ஜெயந்தி புரம் (கருவேப்பங்கேணி) குமாரத்தன் கோவில், தளவாய் குமாரர் கோவில், கிரான் குமாரத்தன் கோவில், லாவணி அல்லது லாவணை குமாரர் கோவில் ஆகிய தனியான குமாரர் கோவில்கள் காணப்படுகின்றன. இக்கோயில்களில் பாரம்பரியமான முறையிலமைந்த சடங்கு நடைபெற்றும் வருகிறது. ஜெயந்திபுரம்

இங்கு, குமாரருடன் தொடர்புடைய மாறத்தெய்வத்திற்கும் பீடம் அமைக்கப்பட்டுள்ளது. புன்னச்சோலை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் குமார தெய்வத்துடன் தொடர்புடைய புள்ளிக்காரன் தெய்வத்திற்கு கல்லால் ஆன பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. முறுத்தானையில் வாழ்கின்ற பூர்விக குடிகளான வேடர்களின் வழிபாட்டில் குமாரருக்கு ஒரு பந்தல் வைக்கப்பட்டு சடங்கு இடம் பெறுவதுண்டு.

தற்காலத்தில் மட்டக்களப்பின் வடக்குப் பிரதேசத்தில் தளவாய், சித்தாண்டி, கிரான், லாவாணையில் தனிக்குமாரத்தன் கோவில்கள் காணப்படுகின்றன. இங்கு இன்றும் பண்டைய பாரம்பரிய முறையிலான குமார சடங்கும் நடைபெற்று வருகின்றது.

இதன் வழியாக, மட்டக்களப்பின்

முறையிலிருந்து வேறுபட்டதும் தனித்துவமானது மாகும்.

குமாரத்தன் சடங்குகள் மட்டக்களப்பின் தொன்மையான வழிபாட்டு முறையாக மட்டுமன்றி தமிழர்களின் தொன்மையான வழிபாட்டு முறையாகவும் கொள்ளத்தக்கது. மட்டக்களப்பில் நிகழும் குமாரத்தன் சடங்கு, இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட சங்க இலங்கியங்களில் காட்டப்பட்டுள்ள "முருகு" எனும் தெய்வத்திற்கு நடைபெறும் "வேலன் வெறியாட்டு" என்பதனை நினைவூட்டுவனவாக உள்ளன!

குமாரத்தன் வழிபாடு மட்டக்களப்பில் மட்டும் நிலவுகின்ற வழிபாடு, மட்டக்களப்பின் பூர்விக மக்களின் வழிபாடு என்ற வகையில், மட்டக்களப்பில் வாழ்ந்த பூர்விக குடிகள் பற்றியும் மட்டக்களப்பின் பண்டைக்காலம் பற்றியும் அறிவதற்கான



# வாவிக்கரையோரம் நின்ற பெண்கள்...

## பெண்ணுக்கு இயற்கைக்கு எதிரான வன்முறை

இந்த பெண்களும் அழகுதான், மட்டுநகர் வாவிக்கரையோர இயற்கையும் எழில்தான். ஆனால், அவர்கள் சொல்லும் செய்தி கசப்பானது.

மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் சத்துருக்கொண்டான் பகுதியில் வாவியோரம் காதலர் தினத்தன்று இந்த பெண்கள் கூட்டம் கூட்டமாக சில காட்சிப் பொருள்களுடன் நின்றிருந்தது, அந்த வழியாக வாகனத்தில் போனவர்களை திரும்பிப்பார்க்கச் செய்தது. ஆனால், அவர்கள் காதலர் தினத்தை கொண்டாட அங்கு கூடியிருக்கவில்லை.

வாகனத்தை நிறுத்தி செய்தி கேட்டால், தாம் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் என்கிறார்கள் அவர்கள். தம்மை வன்முறைக்கு எதிரான ஓவியர்கள் என்று கூறும் அவர்களில் உள்ளரவரும் வேறு பகுதிகளில் இருந்து வந்தவர்களும் இருக்கிறார்கள்.

2012 கணக்கெடுப்பின்படி, உலகில் உள்ள முன்னூறு கோடி பெண்களில் மூன்றில் ஒருவர் அதாவது 100 கோடிப்பேர் வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக பெண்கள் கணிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 100 கோடிப்பேர் அந்த ஆண்டில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் வன்முறைக்கு எதிராக ஆரம்பித்த போராட்டம், இன்று கண்டம் கடந்து இலங்கைக்கும் வந்திருக்கிறது












## காதலர் தினத்தில் வாவியோரம் கூடியவர்கள்





## "இயற்கையும் நாங்களும் ஒன்றே"

கவிஞர்களால் பெண்கள் இயற்கையின் பல அம்சங்களோடு ஒப்பிட்டு பாடப்படுவது, இருதரப்பின் அழகை மையப்படுத்தி. ஆனால், இங்கு இவர்களை இணைத்திருப்பது ''வன்முறை''.

ஆம், தாம் மாத்திரமல்ல இயற்கையும் மனிதர்களின்(ஆண்களின்?) வன்முறையால் பாதிக்கப்பட்டிருப்பதாக இந்தப் பெண்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். 100 கோடிப் பெண்களோடு இந்த இயற்கை உயிர்களையும் கணக்கில் சேர்க்க வேண்டும் என்பது அவர்களது கணக்கு.

அவர்கள் அங்கு காட்சிப்படுத்தியிருந்த பெரும்பாலான விடயங்கள் இயற்கையை அழித்தால், பிளாஸ்டிக்கை அதிகம் பயன்படுத்தினால், முறையற்ற மீன்பிடியால் மீன்களை அழித்தால் என்னவெல்லாம் பாதகம் ஏற்படும் என்று எச்சரிக்கின்றன.

அதுசரி ஏன் தெருவோரம் நிற்கிறீர்கள் என்று கேட்டால், 'எங்கள் செய்தி மற்றும் போராட்டம் உயர்மட்ட மனிதர்களுக்கானது அல்ல இது தெருவோரம் செல்லும் சாதாரண மனிதர்களுக்கானது' என்கிறார்கள்.

ஆங்காங்கு அவர்களுக்கு ஆதரவாக சில ஆண் ஓவியர்களும் கூடியிருந்ததை மறுப்பதற்கில்லை, ஆனால், அங்கு ஆண்களின் பங்களிப்பு போதவில்லையோ என்ற எண்ணமும் தோன்றிச் சென்றது.

வழிப்போக்கர்களும் வாகன வேகத்தை குறைத்து, சற்று தரித்து அவர்களின் செய்தியை கேட்டுப் போயிருக்கலாம். ஆனால், அவ்வழியாக போன வாகனங்கள் பெரும்பாலும் வேகத்தை தணித்தது அல்லது தரித்துச் சென்றது சிறிது தூரத்தில் இருந்த போலிஸ் சோதனை சாவடியில்தான். அவ்வசர உலகந்தான் ஆனால், மட்டக்களப்பு மண்ணின் மைந்தர்கள் சற்று மாறவும் வேண்டும்.

---அலுவலகச் செய்தியாளர்---









# மீண்டும் மிளிருமா புனித மிக்கேலின் கூடைப்பந்து?



நன்கு பழகிய பழைய கட்டிடந்தான். ஆனால் பல ஆண்டுகள் கடந்து உள்ளே போகும் போது ''டப் டப்'' என்ற பந்துகளை தட்டும் ஒலி ஒரு தாலாட்டுப் போல நம்மை வரவேற்கிறது.

புனித மிக்கேல் கல்லூரியின் நுழைவாயில் இது. உள்ளே ஒலிப்பது அங்கு கூடைப்பந்து ஆடும் மாணவர்களின் பந்து ஒலி.

80களில் புனித மிக்கேல் கல்லூரி கூடைப்பந்து சுற்றுப்போட்டிக்குவந்தால் கொழும்பு நகர பள்ளிக்கூடங்கள் எல்லாம் கதி கலங்கிப் போய்விடும் என்பார்கள். போட்டி நடக்கும் நான்கு வயதுப் பிரிவுகளையும் மொத்தமாக புனித மிக்கேல் கல்லூரி வென்றுவந்த ஆண்டுகள் அப்போது மிக அதிகம்.
ஒரு தடவை கொழும்பின் பிரபல கல்லூரியான றோயல் கல்லூரிக்கு எதிராக எழுபதுக்கும் அதிகமான புள்ளிகளை பெற்ற மிக்கேல் கல்லூரி அவர்களை எந்த புள்ளியையும் பெற அனுமதிக்கவில்லை. அதேபோல தெரிவு செய்யப்பட்ட அகில இலங்கை கூடைப்பந்து அணிக்கு எதிராக ஒற்றைப் பள்ளிக்கூடமாக நின்ற மிக்கேல் கல்லூரி வென்ற காலங்களும் உண்டு.

ஆனால், இப்போது மிக்கேல் கல்லூரி கூடைப்பந்தில் பின்னடைய தொடங்கிவிட்டது என்ற விமர்சனங்கள் பல தரப்பிலும் இருந்து வருகின்றன.



## 80களில் கொழும்பை கலக்கிய மட்டுநகரின் மிக்கேல் கல்லூரி அணிகள்



Fr.Paul Satkunanayagam S.J

### ஹேபியர் அடிகளாரின் இழப்பு

இன்றைய மாற்றங்களுக்கு பல காரணங்கள் இருந்தாலும் அதில் மிகப்பெரிய காரணமாக புனித மிக்கேல் பழைய மாணவர்களால் பார்க்கப்படுவது, கூடைப்பந்தை அங்கு அறிமுகம் செய்த ஜெசுவிட் மிஷனை சேர்ந்த வணக்கத்துக்குரிய ஹேபியர் அடிகளார் வன்செயல் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டமையே.


ஏறாவூர் பகுதியில் வைத்து கலவர காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட ஹேபியர் அடிகளாரோடு எல்லாம் போய்விட்டதோ என்று பழைய மாணவர்கள் கவலை கொள்கிறார்கள்.

அமெரிக்காவில் பள்ளிக்கூடத்தில் இருந்தே ஹேபியர் அடிகளாரொடு தான் படித்ததாகக் கூறும் மில்லர் அடிகளார், இருவரும் ஒன்றாகவே மிஷனில் இணைந்து மட்டக்களப்புக்கு வந்ததாக கூறுகிறார். ''வெறும் மண்ணில் இருந்து ஒன்றைக் கட்டியெழுப்பும் திறன் சிலருக்குத்தான் வரும்'' என்று கூறும் அவர், மட்டக்களப்பில் கூடைப்பந்துத் துறையில் ஹேபியர் அதனைத்தான் செய்தார் என்கிறார்.
தனது நண்பனின் இழப்பால் பெரிதும் மனமுடைந்திருக்கும் அவர் ஹேபியருக்கு கூடைப்பந்து என்றால் ''உயிர்'' என்கிறார்.

பள்ளிக்கூடத்தின் உள்ளே வந்தால் எதிர்பார்த்ததை விட விளையாடும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஹேபியர் காலத்தில் குறைந்தது 75 பேராவது குவிந்திருப்பார்கள் ஆனால், பத்துப் பேர் வரைதான் இப்போது விளையாடுகிறார்கள்.



பிறிதாக, புனித மிக்கேல் கல்லூரியின் விளையாட்டுத்துறையில் ஆர்வத்துடன் திகழும் வணக்கத்துக்குரிய போல் அடிகளாரை சந்தித்தோம். அவர் நோயுற்று கட்டிலில் இருக்கிறார். தான் புனித மிக்கேல் கல்லூரியின் கால்பந்து அணிக்கு பயிற்சி வழங்கிய காலங்களை நினைவுகூர்ந்த அவர், பயிற்சியாளர்கள் சிறப்பாக செயற்பட்டால், புனித மிக்கேல் கல்லூரியின் கூடைப்பந்து அணிகள் மாத்திரமல்ல, கால்பந்து அணிகளும் கூட மீண்டும் மிளிரலாம் என்கிறார் அவர்.




Fr.Henry Miller

### கிரிக்கெட்டால் அழியும் ஏனைய விளையாட்டுகள்

கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள அதீத ஆர்வமும் கூடைப்பந்து போன்ற ஆட்டங்களில் ஆர்வத்தை இழக்கச் செய்துள்ளதாம். கடந்த 6 ஆண்டுகளாக புனித மிக்கேல் கல்லூரியின் வெற்றி வாய்ப்புக்கள் குறைந்து போய்விட்டதாம். இருந்தாலும் கடந்த வருடத்தில் சிரேஸ்ட அணிகள் சிறப்பாக ஆடி அகில இலங்கை விருதுகளை வென்றனவாம். அதுமாத்திரமல்லாமல் இலங்கையின் மிகச் சிறந்த இரு வீரர்கள் என்ற பெருமை புனித மிக்கேல் கல்லூரின் மாணவர்களுக்கு கிடைத்துள்ளதாம். இவை சிறிய நம்பிக்கை கீற்றுகள்.

~~ அருளப்பா ~~



### விளையாட்டுக்கான வளம்

முன்பெல்லாம் ஹேபியர் அடிகளார் மாணவர்களுக்கான பந்துகளை பெருமளவில் கொண்டு வந்து குவிப்பார். அதற்காக இப்போது வளம் குறைந்துவிட்டது என்று சொல்ல முடியாது என்கிறார் சுரேஸ் றொபர்ட். ஏனென்றால் இப்போதெல்லாம் விளையாட வரும் மாணவர்களே ஆளுக்கு ஒரு பந்தை கொண்டு வருகிறார்களாம்.



# மட்டுநகரின் சமர்

மட்டக்களப்பின் கிரிக்கெட் சமர் என்று வர்ணிக்கப்படும்

மட்/ கோட்டமுனை அணியினருக்கும், மட்/ சிவானந்தா அணியினருக்கும்

இடையிலான "போராட்டம்" கிரிக்கெட் தொடர் இந்த அவருடமும் 11வது தடவையாக கடந்த 17 மற்றும் 18ஆம் திகதிகளில் சிவானந்தா மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கோட்டைமுனை அணியினர் நடந்த இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று, 2017ஆம் ஆண்டுக்கான சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதலாவது போட்டியில் ஆட்ட நாயகனாக கோட்டைமுனையின் வினோதனும், இரண்டாவது போட்டியில் தேனுஜனும் தேர்வாயினர்.

தொடராட்ட நாயகனாக தேனுஜன் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக போட்டிகளில் வெற்றிபெற்ற கோட்டைமுனை அணியினர் மட்டுநகர் சவால் கிண்ணத்தை தமதாக்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

~~ மிருஷன் ~~

BATTLE OF BATTI
BIG MATCH 2017





## வருடாந்த விளையாட்டு போட்டிகளும் தமிழ் தின நிகழ்வுகளும்



மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு போட்டிகளும் தமிழ் தின நிகழ்வுகளும் கோட்டைமுனை இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பெப்ரவரி 16ஆம் திகதி நடைபெற்றன.

கல்லூரியின் அதிபர் திருமதி தவத்திருமகள் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற போட்டிகளில் விருந்தினர்களாக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ். மனோகரன், வலய கல்வி பணிப்பாளர் K.பாஸ்கரன் தேசிய அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் எம். றொசான் ஹெமேந்திரா, துணை கல்விப்பணிப்பாளர் ஆர்.ஜே. பிரபாகரன், துணை கல்விப்பணிப்பாளர் டி. யுவராஜன் மற்றும் துணைக்கல்விப் பணிப்பாளர் வி. லவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புகைப்படங்கள் : எஸ். ஜெகதீஸ்வரன்







அரங்கம்

உங்கள் விளம்பரங்களை அரங்கம்
இணைய வானொலி மற்றும் செய்தித்தாளில்
பதிவு செய்து கொள்ள
070 300 900 1 065 222 911 2



# நெஞ்சில் இட்ட கோலமெல்லாம் அழிவதில்லை..

அவர் காலமாகி 4 ஆண்டுகள் ஆகிவிட்டதை முன்னிட்டு எனது நண்பன் டொமி கணேசமூர்த்தி முகநூலில் எழுதிய ஒரு நினைவுக் குறிப்புத்தான் இந்தக் கட்டுரைக்கு உந்துதல்.

நான் இப்போது பார் வீதியில் தங்கியிருக்கின்றேன், நானும் மட்டக்களப்பை சேர்ந்தவன் என்பதை தவிர அவருக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆனால், அவரது தொழில்சார் பக்கம் முற்றிலும் சினிமா உலகம் அறிந்தது.

மட்டக்களப்பை சேர்ந்த திரைப்பட இயக்குனர் பாலு மகேந்திரா (பாலநாதன் மகேந்திரன்) தமிழக சினிமாவின் போக்கை மாற்றியவர்களில் ஒருவராக



கருதப்படுகிறார். அவரது படப்பிடிப்பும், இயக்கமும் பல மொழி படங்களை உலகத்தரத்துக்கு பேசவைத்திருக்கின்றன. இன்று தமிழ் சினிமாவை ஆளும் பல இயக்குனர்கள் கூட அவரை குருவாக வரித்தவர்கள்.

ஆனால், நான் இங்கு பார்க்க விளைவது அவரது சொந்த இடத்துக்கும் அவருக்குமான தொடர்பு பற்றி. சில காரணங்களால் அவர் பல வருடங்களாக தனது சொந்த ஊரை பெயர் குறித்து பேசியதில்லை. ஆனால், மறைமுகமாகவேனும் தனது ஊரின் மகத்துவம் பற்றி பேச அவர் தவறியதில்லை.

அவர் இங்கு வாழ்ந்த வீட்டில் வேறு யாரோ இப்போது இருப்பதால் அதனை படம் பிடிப்பதை தவிர்த்தோம். ஆனால்,

### "பெண்களை கொஞ்சம் கூடுதலாகவே ரசிப்பவர் அவர்"

அவருடன் நெருக்கமாக பழகிய எவரையாவது தேடிய போது பேராசிரியர் மௌனகுரு அவர்கள் அதற்கு பொருந்திப்போனார்.

அவர் எப்படி என்று இவரிடம் கேட்டால் "அழகை ஆராதிப்பவர்" என்று கூறினார் இவர். புரியவில்லையே என்றால், "இயற்கையை மாத்திரமன்றி கொஞ்சம் அதிகமாக பெண்களின் அழகையும் ரசிப்பது அவரது குணம்" என்றார் பேராசிரியர்.

பாலு மகேந்திராவும், உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனும், தானும் நண்பர்கள் என்று சொன்ன இவர், அவரது படத்தில் வருகின்ற கொஞ்சம் கறுத்த மெல்லிய கதாநாயகிகள் எல்லாம் மட்டக்களப்பில் அவர் ரசித்த பெண்களின் சாயல் என்கிறார் சற்று குசும்பாக.

அவரது படங்கள் சிலவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் துணையை கொண்ட கதாநாயகன் இருந்தால், அவர் இறுதியில் தனது தவறுக்கு வருந்துபவராக பாலுமாகேந்திரா காண்பிப்பார் என்றும், அதுவே அவரது குணாதிசயம் என்றும் கூறுகிறார் இவர்.

பாலுமகேந்திரா அவர்கள் இங்கு மட்டக்களப்பில் வாழ்ந்த காலம் இங்கு தமிழ் தேசிய போராட்டங்கள் தீவிரமடைந்த காலகட்டம். அவரது நண்பனான காசி ஆனந்தன் அதில் முன்னணியில் இருந்தார் அப்போது. அதேபோல மௌனகுரு அவர்களும் இங்கு வழமையாக பிரபலமான நாட்டுக்கூத்தின் விசுவாசி. காசிஆனந்தனால், தமிழ் தேசியத்துக்குள்



மௌனகுரு ஈரக்கப்பட்டார், அதேபோல மௌனகுருவின் நாடகங்களில் காசி ஆனந்தன் பங்கேற்றிருக்கிறார். ஆனால், இவை எதிலும் அகப்பட்டுக்கொள்ளாதவர் பாலுமகேந்திரா என்கிறார் மௌனகுரு.


மாறாக இங்கு மட்டக்களப்பில் இருந்த வாவியும், அதுசார்ந்த மரங்களும், மாமாங்கக் குளமும் அவரை கவர்ந்த விசயங்கள். கூடவே பெண்களின் அழகிலும் அவர் ஈடுபாடு கொண்டிருந்தாராம்.

அவர் இயல்பாகவே ஒரு ஜீனியஸ் என்பதால், "ஓடுற கூட்டத்தோடு அவரால் ஒத்தோட முடியவில்லை" என்கிறார் இவர். அவர் இங்கு மனிதரோடு வாழவில்லை இயற்கையோடு வாழ்ந்தார்,

ஆனால், மனிதரை கற்றார் என்கிறார் மௌனகுரு.

அவர் இங்கு கற்ற மனிதர்களின் இயல்புகளும், ஊரின் அழகும் அவரது பல படங்களில் பிரதிபலித்ததாக பலரும் கூறுகிறார்கள்.

நாடகத்திலும், அரசியலிலும் ஈடுபாடு காட்டாத பாலுமகேந்திரா அடிக்கடி போகும் இடம்



இங்கு மட்டக்களப்பில் அப்போது இருந்த ஒரு போட்டோ ஸ்டுடியோவாம். அங்கிருந்த ஓவியர் குமாருக்கும் இவருக்கும் இடையில் ஊடாட்டம் அதிகமாம். அது அவரது புகைப்படக் கலை ஆர்வத்துக்கான வடிகாலாக இருந்திருக்கலாம். அதுமாத்திரமல்லாமல், அப்போதைய கொழும்பு பத்திரிகைகளில் மட்டுநகர் மகேந்திரன் என்ற பெயரில் அழகான புகைப்படங்களும் பிரசுரமாகும் என்று

### மட்டுநகர் அவரை நிறையவே பாதித்திருக்கிறது"

ஒருதடவை சொல்லியிருக்கிறார் கிங்ஸிலி செல்லையா என்ற புகைப்படப் பிடிப்பாளர். எல்லாரோடும் மிகவும் மென்மையாகப் பழகுவாராம் பாலுமகேந்திரா. மட்டுநகர் வாவியின் ஓரமாக சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்து வருவாராம். குறிப்பாக இங்கு அவர் வாழ்ந்த பார்

வீதியில் இருக்கும் லூர்து மாதா

### ஓடுற ஓட்டத்தில் ஒத்தோட முடியாத அவர் ஒரு ஞானி

கோயிலின் சுருவம் பவனி வரும் வழி அவரது நடைவழியாம்.

அதேபோன்று மாமாங்க கோயில் குளமும் அவருக்கு பிடித்த இடமாம். அங்கு ஒரு நண்பன் நீரில் மூழ்கி இறந்த சம்பவத்தை தனது படம் ஒன்றிலும் அவர் பதிவு செய்துள்ளார்.

வாழ்ந்தால் எதையாவது சாதிக்கணும் என்று கூறும் பாலுமகேந்திரா கொழும்பில் "தேனருவி" என்ற பெயரில் ஒரு பத்திரிகையை நடத்தியிருந்தாராம். அதில் கனதியான இடதுசாரி கருத்துக்களை அவர் எழுதி வந்திருக்கிறார்.

மட்டுநகரில் தன் நெஞ்சத்தில் எழுதிய அழகை, மனிதரை தனது சினிமாவில் பாலுமகேந்திரா பதிவு செய்திருக்கிறார். இன்று தனது பணியை முடித்துவிட்டு அவர் போய்விட்டார். ஆனால் மட்டுநகரின் அந்த அழகு பல அனர்த்தங்களையும் தாண்டி அழியாத கோலமாக நிற்கிறது.





HOTEL NIRUTHA
An experience to be experienced



HOTEL NIRUTHA
A new name in Hotels, a wholly refreshing experience for the guests.
Vanakkam – Ayubowan – Welcome – Assalamu Alaykum

Hotel Nirutha, in the historic town of Chenkalady, Batticaloa – in the East of Sri Lanka, is so conveniently accessed – being so near to the junction of two national roads – the A 5 / A 15. It is only minutes to the long, pure, golden stretches of sands of world renown – PASIKUDAH beach, the Indian Ocean lapping on in eternal rhythm.

- Luxurious, air conditioned rooms with attached bath & mini bars in the room
- A well-equipped conference hall
- Banqueting hall suitable for a variety of events
- Secure parking
- Free WI-FI access from all areas of the premises
- Cable TV
- High quality massage equipment
- Karaoke facilities
- Front desk staffed 24 / 7

Guests can enjoy the most relaxing stay, under star studded skies, in the eco-friendly environment with children kept interested and actively engaged at the best indoor play area in the town. Those seeking adventure can enjoy cycling, fishing and snorkelling – dipping in the Indian Ocean off the finest, clean, golden sands.

Hotel Nirutha's dining variety includes intercontinental food, local food, and south Indian foods prepared with the best quality local and international ingredients by the highly experienced international chefs of Hotel Nirutha. The in-house bar contains a wide selection of wine & spirits.

Hotel Nirutha,
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444
Fax:+94652054092
Hotline: +94779990910
UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelnirutha.com

# ஏவுகணை, மோட்டார் மழை தொடகிறது. தப்பிப்பிழைக்க இடமில்லை





சபிக்கப்பட்ட பூமி என்ற பெயர் அண்மைக்காலத்தில் சிரியாவுக்குத்தான் பொருந்தும். மத்திய கிழக்கே அண்மைய ஆண்டுகளில் போரில் சிக்குண்டு இருந்தாலும் சிரியா அனுபவிக்கும் துன்பம் சொல்லி மாளாது.

அல்கைதா போன்ற இஸ்லாமியவாத தீவிரவாதம் ஒரு புறம் என்றால் மேற்கு நாடுகளுக்கும் ரஷ்யா அணிக்கும் இடையிலான மறைமுக மோதல் களமாகவும் அது மாறியிருக்கிறது. இவற்றுக்குள் அதிபர் அசாத்தின் அனுதாபம் இல்லாத போக்கு ஒரு புறம்.

இராக் போன்ற நாடுகளில் இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான நாடுகளின் தாக்குதல் ஓரளவு அண்மைக்காலமாக குறைந்திருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் அமெரிக்காவின் அண்மைய கவலையாக மாறியிருப்பது வடகொரிய பிராந்திய பிரச்சினைகள்தான்.

ஆனால், சிரியாவின் முற்றுகையில் இன்னமும் இருக்கும் கிழக்கு கூட்டா என்னும் பகுதி இப்போது அனுபவித்துவரும் துயரம் எதிரிக்கும் நடக்கக்கூடாத துன்பம்.

அங்கு கிளர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் சிறிய பகுதி முற்றுகைக்குள் இருக்கிறது. அங்குள்ள நிலைமைகள் 'கற்பனைக்கு எட்டாத கொடுமை' என்று ஐநா கூறியுள்ளது.

கடந்த மூன்று நாட்களில் அங்கு நடந்த குண்டுத் தாக்குதல்களில் 250 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக ஐநா அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அதேவேளை அஃபிரினில் துருக்கிப் படைகள் மற்றும் சிரிய கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதலை எதிர்கொள்ள அரசாங்க ஆதரவு போராளிகள் களமிறங்கியுள்ளனர்.

அதேவேளை ரஷ்யா துணையுடன் அரசாங்க ஆதரவுப் படைகள் அந்த இடத்தை மீளக்கைப்பற்ற தாக்க ஆரம்பித்துள்ளனர்.

ஏவுகணைகளும், மோட்டார்களும் மழை போல ஏவப்படுவதாக அங்கிருக்கும் மக்கள் கூறுகிறார்கள். அங்கு பதுங்கி, உயிர் பிழைக்க இடமில்லை என்று அவர்கள் பரிதவிக்கிறார்கள்.

1200க்கும் அதிகமான பொதுமக்கள் காயமடைந்திருக்கும் அதேவேளை, கொல்லப்பட்டவர்களில் 50க்கும் அதிகமானோர் குழந்தைகள் ஆவர்.

போர் ஆரம்பித்து 7 வருடங்கள் ஓடிவிட்டாலும் சிரியாவின் போர் முடிந்தபாடில்லை. ஆனால் போரின் போக்கு மாறிக்கொண்டிருக்கிறது.

டமஸ்கஸுக்கு அருகில் உள்ள கிளர்ச்சிக்காரர்களின் பதுங்கிடங்களை கைப்பற்றி, தன் வசப்படுத்த அதிபர் அசாத் முயன்றுகொண்டிருக்கிறார்.

## உலகில் சபிக்கப்பட்ட சிரியாவின் அப்பாவி மக்கள்




Father describes a 'miserable day for Eastern Ghouta'

Eastern Ghouta resident: 'Missiles are dropping like rain'

சிரியா இன்னமும் போருடன் தொடர்புடைய அதிகாரப் போட்டியின் வலைக்குள் சிக்கியே காணப்படுகின்றது.

அங்கிருக்கும் அமெரிக்கர்களுக்கோ இரான் அங்கு பெரும் அச்சுறுத்தலாக தெரிகின்றது. நேரில் செய்ய முடியாத போரை அவர்கள் சிரிய மண்ணில் தீர்க்கப் பார்க்கிறார்கள்.

ஆனால் மொத்தத்தில் இடையில் அகப்பட்டு மடிவது அப்பாவி மக்களே.

## மேலைத்தேய மற்றும் ரஷ்ய அணிகளின் மறைமுக மோதல்களமாக மாறி சிக்கித்தவிக்கும் பூமி

குரு
அலுமினியம், கண்ணாடி பிட்டிங்
3ம்.குறுக்கு சின்ன ஊறணி
மட்டக்களப்பு
0776156588
நவீன முறையில் மிகவும் அழகாக அலுமினியம், கண்ணாடி பிட்டிங் செய்துதரப்படும்

Thanu Sounds
29/50 Pathimma Road Veechukalmunai Road, Batticaloa
Call us: 077 4018351
075 4944550
Dj System
Indoor /outdoor Sounds
Sound for all Kind of Functions

ARANGAM NEWS (PVT) LTD
+94703009001 | +94652229112 | +94713999091
arangamnews@gmail.com
www.arangamnews.com
www.facebook.com/arangamFm
227,Bar road,Batticaloa
+94703009001
அரங்கம் Fm
அரங்கம் செய்திகள்

## ““சந்திரசேகரனிஸம்” -பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்: கல்விப் புலத்தில் ஓர் முனிவர்

பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர்களைப் பிரிந்து முப்பத்தி ஒரு ஆண்டகளாகிவிட்டன. யார் இந்தப் பத்தக்குட்டி சந்திரசேகரம்?
வெள்ளை வெளேரென்ற உடை;
மிகுந்த அழகான பற்கள்;
பிரகாசமான சிரித்த முகம்; வாரிவிடப்பட்ட வெள்ளிக் கேசம்; மென்மையான பேச்சு
எப்போதும் உபதேசம் அல்லது அறிவுரை கூறும் கனிவான குரல்.அவரை நினைத்ததும் இவைதான் எனக்கு ஞாபகம் வருகின்றன.



1961 பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கல்வி டிப்ளோமா மாணவனாக கொழும்புப் பல்கலைக்கழகத்திலும், பின்னர் உடனாசிரியனாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் அவருடன் நெருக்கமாகப் பழகிய இனிய நாட்கள் ஞாபகம் வருகின்றன. நம்மத்தியில் வாழ்ந்து மறைந்து போன ஓர் கல்வியல் ஞானி அவர்.

1961 இல் பேராதனைப் பல்கலைக்கழக விஜயவர்த்தனா விடுதியில் பேராசிரியர் கைலாசபதியின் அறையில் அவரை முதன் முதலில் கண்டமை ஞாபகம் வருகின்றது. புன்னகை தவழும் கனிவான அந்த முகம் எனக்கு எடுத்த எடுப்பிலேயே பிடித்துக்கொண்டது.

மட்டக்களப்புப் பையன் உங்கள் ஊரவர் எனக் கைலாசபதி என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

என்மீது பேராசிரியர் சந்திரசேகரத்துக்கு அக்கறை உண்டானது..
அன்று நீண்டதோர் இலக்கிய உரையாடல் கைலாசபதி அவர்களின் அறையில் நடந்தது.

என்னோடு காலம் சென்ற எழுத்தாளர் யோகநாதனும், கதிர்காம நாதனும் வந்திருந்தார்கள்

ஊரையாடல் முடிய எம்மைத் தனது அறைக்குள் கூட்டிச் சென்றார். அவரது அறை புத்தகங்களால் நிரம்பிக் கிடந்தது. பல்வேறு துறை நூல்கள். “தாமரை“ ஆண்டு மலரை என்னிடம் தந்தார். அதன் அட்டையில் தமிழக கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தரான ப. ஜீவானந்தத்தின் படம் பெரிதாக இருந்தது.

“இவரைத் தெரியுமா? என்றார்.
“இல்லை“ என்றேன், ப. ஜீவானந்தத்தை அறியாத வயது அது. ப. ஜீவானந்தம் பற்றியும் கம்யூனிஸம் பற்றியும் விளக்கி, அதனைப் படித்துப்பாருங்கள் என்றார்.

நாங்கள் அப்போது பல்கலைக்கழக இளம் சோசலிஸ்ட் சங்க உறுப்பினராயிருந்தோம். பொதுவுடைமைக் கருத்துக்கள் எனக்கு அறிமுகமான காலங்கள் அவை.

ஒரு வாரத்தினுள் அதனை வாசித்துவிட்டு அவரிடம் ஒப்படைத்தேன். அடுத்து அவர் எனக்குத் தந்த நூல் ராகுல்ஜி சாங்கிருத்தியாயனின் “பொதுவுடைமைதான் என்ன?“ என்ற நூல். பொதுவுடமை சித்தாந்தத்தை மிக எளிமையாகவும் ஆழாமாகவும் விளக்கும் நூல் அது.
நான் தமிழத் துறை மாணவன். அவரோ கல்வித்துறை விரிவுரையாளர். எனினும் எங்கள் உறவு ஆசிரிய மாணவ உறவாக மலர ஆரம்பித்தது.

சமதர்ம நூல்கள் பால் என் சிந்தனையைத் திருப்பினர் அன்று இருவர்.

ஒருவர் பேராசிரியர் கைலாசபதி மற்றவர் பேராசிரியர் சந்திரசேகரம். இருவரும் நண்பர்கள். அவர்கள் அறைகள் அருகருகே இருந்தன. இவர்கள் இருவரின் உறவாலும் என் வாசிப்பு முற்போக்கு நூல்களின் பால் திரும்பியது.என் சிந்தனைகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

இப்படித்தான் எமது உறவு ஆரம்பித்தது. பின்னர்தான் பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் பற்றிய தகவல்களை அறிய ஆரம்பித்தேன்.
அவர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா வீட்டில் வளர்ந்தவர். பீட்டர் கெனமன் போன்ற கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந்தலைவர்களின் நண்பர். கட்சியுறுப்பினர் அல்லாவிடினும் கட்சி அனுதாபி. அவரே இவை பற்றியெல்லாம் என்னுடன் கூறியிருக்கிறார்.

கால்மாக்ஸை அவர் எல்லோரையும் போல மார்க்ஸ் என அழைக்கமாட்டார்.

“மாக்ஸ் முனிவர்“ என்று மிக மரியாதையாக அழைப்பார். இந்திய தத்துவ மரபில் ஞானிகளாக முனிவர்களைக் கண்ட அவர் தொழிலாள வர்க்கத்தை மீட்க வந்த மார்க்ஸை ஒரு முனிவராகவே கண்டார்.

நாடக ஒத்திகைகளுக்கு பேராசிரியர் வித்தியானந்தன் பேராசிரியர் சந்திரசேகரத்தை அழைத்து வருவார். நிறையத் தடவைகள் பேரா. சந்திரசேகம் ஒத்திகைகளுக்கு வந்து ஆலோசனைகள் கூறியுள்ளார். மண்டூரில் தான் கூத்துப்பார்த்த அனுபவங்களை,மண்டூர்க் கூத்துக் கலைஞர்களைப் பற்றியெல்லம் எங்களிடம் கூறுவார். மட்டக்களப்புக் கூத்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆடப்படுவது அவருக்கு மகிழ்ச்சி தந்தது.

உலகளாவிய சிந்தனைப் போக்கு உடையவராயினும் பிரதேசப் பற்றும் அவரிடம் இருந்தமையை நாம் அவதானித்தோம்

எமது நாடகங்களின் பிரதான பார்வையாளர்களுள் ஒருவரானார். என் நடிப்பு என்மீது அவருக்கு பெருவிருப்பை ஏற்படுத்தியது. என்னுடன் இன்னும் நெருக்கமானார்.
எமது மாணவர் குழாம் அவரின் தீவிர வாசிப்பைப் பார்த்து வியந்துள்ளது. அவர் போல நாங்களும் படிக்க முயற்சி செய்தேம். கற்றலில் பார்த்துக் கற்றலும் ஒன்றல்லவா? நூல் நிலையமே வாழ்விடம் எனக்கிடக்கும். இப்படியான விரிவுரையாளர்களை இன்று பல்கலைக்கழகங்களில் காண்பதே அரிதாகிவிட்டது.

பல்கலைக்கழக நூல்நிலையங்கள் விரிவுரையாளர்களைக் காணாமல் இன்று பரிதாபமாக நிற்கின்றன.

1961 தொடக்கம் 1965 வரை எங்கள் உறவு இவ்வண்ணம் அறிவு உறவாகவும் கலை உறவாகவும் அமைந்திருந்தது.

1974-1975 காலப்பகுதியில் அவரிடம் நேரடி மாணவனாக கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் எங்களுக்குக் கல்வித் தத்துவம் படிப்பித்தார்.

அப்போது எனக்கு வயது 30 இருக்கும்.

அவர் கற்பித்தல் அலாதியானது. அவருக்கு என்றே சில சொற்கள் வைத்திருப்பார். பல்கலைக்கழகம் என அழைக்கமாட்டார். செழுங்கலை நியமம் என்றே அழைப்பார். தொல்காப்பியரை வெறும் தொல்காப்பியர் என அழைக்கமாட்டார். ஒல்காப் புகழுடை தொல்காப்பியன் என்பார். வள்ளுவரை வெறுமனே வள்ளுவர் என்று கூறமாட்டார் வள்ளுவப் பெருந்தகை என்றே கூறுவார்

அழகான செவ்வியற் தமிழ் ; அவர்நாவில் சுழன்று விளையாடும். கல்வியியலைத் தமிழில் கொணர்ந்த முன்னோடியல்லவா அவர்!

காலையில் அவர் வழிபடப் போகும் இடங்கள் பல. இந்துக் கோயிலுக்குச் செல்வார். கிறிஸ்தவ தேவாலயம் செல்வார். புத்த கோயில் செல்வார். மசூதிக்கு முன் நின்று வணங்குவார். ஆங்கெல்லாம் எம்மையும் அழைத்துச் செல்வார். அமைதியாக அந்த இடங்களில் அமர்ந்திருப்பதே அவரது வணக்க முறை.

“பொதுவுடைமை கடவுள் மறுப்புத் தத்துவம் அல்லவா சேர்“ என நான் கேட்பேன்.

பதில் எதுவும் கூறமாட்டார். ஒரு புன்னகைதான் பதிலாக வரும். அனுபவத்தில் அதனை அறிவாய் என்றுதான் அந்தப் புன்னகை மூலம் சொன்னாரோ தெரியாது.

எனக்கு கம்பனித் தெருவில் ஒரு பாடசாலை ஒதுக்கப்பட்டிருந்தது. இரண்டு வாரங்கள் அங்கு கற்பிக்க வேண்டும்.

அப்பாடசாலை அதிகமாக கம்பனித் தெரு சேரிப்புற மக்களின் பிள்ளைகள் கற்கும் பாடசாலை. அம்மக்கள் பெரும்பாலும் கூலித்தொழிலாளிகள்.மூட்டை சுமப்போர்,கான் கழுவுவோர்,வீதி துப்புரவு செய்வோர் எனப்பல வகையினர்
அவர்களின் பிள்ளைகள் அருமையான பிள்ளைகள்.
சந்திரசேகரம் சேர்தான் எனது மேற்பார்வையாளர்.

அடிக்கடி என் கற்பித்தலை மேற்பார்வை செய்ய பாடசாலைக்கு வருவார். பிள்ளைகளுக்குக் கற்பிப்பது மாத்திரமல்ல அவர்களின் பின்னணி, வாழ்க்கை, அவர்களைப் பாதிக்கும் சூழல் என்பனவற்றையும் ஓர் ஆசிரியன் அறிந்திருக்க வேண்டும் என்று எனக்கு தனது நடைமுறை மூலம் போதித்தார்.

அவருடனான அனுபவங்கள் மிகமிக அதிகம். அவற்றை ஓர் பெரு நூலாக விரித்து எழுதலாம். அவர் சிந்தனைகளின் சாறாக வந்த “கல்வித் தத்துவம் “ என்னும் நூல் ஒரு முக்கியமான நூல். கல்வி பற்றிய அவரது சிந்தனைகளை அந்நூலில் காணலாம் அவரது கன்னி நூல் அது.

அந்நூலுக்கு முன்னுரை எழுதிய கல்வியியல் அறிஞர் இரத்தினா நவரெத்தினம் தன் முன்னுரையில் இவ்வாறு கூறுகின்றார்:
“கல்வித் துறையில் மேற்படிப்பை மேற்கொண்ட பல்வேறு கலாசாரத்தையுடைய




பட்டதாரி மாணவர்களுக்கு கல்வித் தத்துவம்: கோட்பாடு ஒப்பீட்டுக் கல்வி, கலைத்திட்ட அமைப்புஆகியவற்றைச் ஸ்ரீலங்கா பல்கலைக்கழகத்தின் கல்வித் துறையில் பதினைந்து ஆண்டுகள் கற்பித்த ஆசிரியரின் அனுபவத்தின் பயன்“ எனக் குறிப்பிடுகின்றார்.

### சந்திரசேகரனிஸம்:

பிளேட்டோ, ரூஸோ, ஜோன் டூயி என்ற மேற்கத்தைய கல்வியியலாளர்களுடன்

கார்ல் மாக்ஸையும் அவர் இணைக்கையில் அவர் மற்றவர்களில் இருந்து மாறுபடுவார். அது மட்டுமன்றி அவர்களோடு வள்ளுவர், விவேகானந்தர், காந்தியடிகள், தாகூர் என இந்தியக் கல்வியியலாளர்களின் தத்துவங்களையும் இணைப்பார். அதுமாத்திரமா, ஆறுமுகநாவலர்,

விபுலானந்த அடிகள், அநாகரிக தர்மபாலா, சித்திக் லெவ்வ்வை என உள்ளுர்க் கல்வியியலாளர்களையும் இணைப்பார்.

மேற்கத்தைய மரபில் அல்லாது கீழைத்தேய மரபில் அவர் கல்வியை,உளவியலை, ஆசிரிய விழுமியங்களை நோக்கினார்.

கல்வியைப் புரிந்து கொள்வதில் மேற்கத்தைய மரபையும் கீழைத்தேய மரபையும் இணைத்து அவற்றினூ டாக நமக்கு ஏற்ப ஒரு முழுமை தேடும் இப்பார்வை பேராசிரியர் சந்திரசேகரத்திற்கேயுரிய பார்வை என நினைக்கின்றேன்.

மேற்குலகக் கல்வியினையும் தத்துவங்களையும் அவர் பயின்றாலும் அவற்றை நம் நாட்டுக்குத் தக பிரயோகிக்க வேண்டும் என்பது அவரது நோக்கு. மேற்கத்தைய சிந்தனையும் கிழக்கத்தைய சிந்தனைகளையும் குழைத்து எடுத்து நம் நாட்டிற்கான கல்வி முறையினைப் பற்றிச் சிந்தித்த அவர் சிந்தனைகளை, மாக்ஸிஸம், பிளேட்டோவிஸம் என அழைப்பது போல நாம் சந்திரசேகரனிஸம் என்று அழைக்கலாம்.

பேராசிரியர் சந்திரசேகரத்தின் எழுத்துக்களை வாசிக்கையில் அவர் அனைத்தையும் உள்வாங்கித் தன்வயமாக்கி சுயமாக எழுந்த ஓர் பேராசிரியராக எனக்குப் படுகின்றார்.

காந்தியின் தொழிற் கல்வியும் தாகூரின் பண்பாட்டுக் கல்வியும் பிளேட்டோவின் அறிவியற் கல்வியும் அவரிடம் இணைந்து மனிதனை முழுமனிதனாக்கும் கல்விச் சிந்தனை அவரிடம் முகிழ்க்கின்றது. இதனையே நான் ““சந்திரசேகரனிஸம்““ எனக் குறிப்பிட்டேன். மாக்ஸை முனிவர் என அழைத்த பேராசிரியர் சந்திரசேகரம் நல்லாசிரியனுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்.

அவரே ஒரு முனிவராகவும் வாழ்ந்தவர். அவரையும் நாம் ஓர் இல்லற முனி என அழைப்பதில் தவறில்லை.

ஆம், ஒரு இல்லறக் கல்வி முனிவர் பேராசிரியர் சந்திரசேகரம் இன்னொரு வகையில் அவரை நாம் கல்வி முனிவர் என அழைக்கலாம்



“எனது மகன் டாக்டராகவோ அல்லது பொறியியலாளராகவோ வரவேண்டும்.”

என்பது எனது ஆசை அல்ல. அவனை மற்றவர்கள் புறக்கணிக்காத ஒரு நிலை வேண்டும்’ என்று அழுகிறார் ஒரு தாய்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை இப்படியாக 30 தாய்மார் தினமும் அழுதுகொண்டிருக்கிறார்கள்.

ஓட்டிசத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இவர்களின் குழந்தைகள். தமிழில் சொல்வதானால் தற்சிந்தனையாளர் அல்லது தீரனியம் குழந்தைகள் என்று இவர்களை அழைக்க முடியும்.

இப்படியான குழந்தைகளுக்காக மட்டக்களப்பு கோவிந்தன் வீதியில் உள்ள ‘’பிரதர்ஸ் இல்லத்தில்’’ அருட் சகோதரர்களின் ஆதரவுடன் “தீரனியம்” என்ற பெயரில் ஒரு அபய நிறுவனம் நடத்தப்படுகின்றது. அங்கு 15க்கும் அதிகமான இப்படியான குழந்தைகளுக்கு பயிற்சி(சிகிச்சை) வழங்கபப்டுகின்றது.

‘குழந்தையை சுகமாக்க முடியாது என்று டாக்டர் கூறியதால் கணவர் தற்கொலை செய்தார்’

பள்ளிக்கூடத்திலும் ஏனைய இடங்களிலும் ஏனையோர் புறக்கணிப்பது அல்லது ஒதுக்குவது என்கிறார் இன்னுமொரு தாய்.

இந்த குழந்தைகள் சில சமயங்களில் தமது உணர்வுகளை, தேவைகளை ஏனையோர் புரிந்து கொள்ளாது போனால் கடுமையாக அதனை வன்முறையுடன் வெளிப்படுத்துவார்கள். அதனால் பல தாய்மார் தமது குழந்தைகளுடன் அவர்களின் குழந்தைகளை சேரவிடுவதில்லையாம். சில சமயம் பெரியவர்கள் கூட அப்படி இந்தக் குழந்தைகளை ஒதுக்குவார்களாம்.

2017இல் இந்த நிலையத்தை தாம்



வன்முறையோடும், பெரும்பாலும் தயக்கத்தோடும் எதிர்கொண்டன. அவர்களை கையாள அங்குள்ள பணியாளர் மிகுந்த சிரத்தை

## “நாங்கள் தனித்துவமானவர்கள் - எங்களை புரிந்து கொள்ளுங்கள்”

இது ஒன்றும் மனநோய் அல்ல. சொல்லப்போனால், மிகச் சிறந்த விஞ்ஞானிகளான ஐசக் நியூட்டன், ஐன்ஸ்ரீன் ஆகியோர் கூட இந்த வகையை சேர்ந்தவர்கள்தான். அவ்வளவு ஏன் தமிழில் பிரபலமான மலையாள நடிகர் ஒருவர் கூட இதனால் பாதிக்கப்பட்டவர்தான். ஆனால், இவர்கள் தனித்துவமானவர்கள் சில விசயங்களில் மாத்திரம் மிகவும் அதீத கவனத்தை செலுத்திக்கொண்டு, புறச்சூழல் பற்றி பெரிய அக்கறை இல்லாது, ஒரு தனித்தீவாக வாழும் ஜீவன்கள் இவர்கள்.

ஆனால், எமது நாட்டில் இவர்கள் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் அவர்களை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு, அவர்கள் நடத்தையில் நம்மால் தலையிட முடியாது போய்விடுகிறது என்கிறார் டாக்டர். ஜூடி ரமேஸ் ஜெயக்குமார்.



ஜூடி ரமேஸ் ஜெயக்குமார்.

**ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட இவர்களை தற்சிந்தனையாளர் அல்லது தீரனியர் என்று அழைக்க முயற்சிக்கலாம்**



இங்கு வருகின்ற ஒவ்வொரு தாயிடமும் தமது குழந்தை பற்றி பெரும் சோக அனுபவம் இருக்கிறது. அவர்களை சிறு வயதிலேயே அடையாளம் கண்டு தாம் வழி நடத்த முடியாமல் போய்விட்டதே



கிருபானந்தன் மோகனா.

என்று பலர் பெரும் ஆதங்கப்பட்டார்கள். பல இடங்களில் சென்று உரிய சிகிச்சை கிடைக்காமல்
அவர்கள் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். ‘உனது குழந்தையால் இனி நடக்க முடியாது’ என்று ஒரு மருத்துவர் கூறியதால் தனது கணவர் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறுகிறார் *கிருபானந்தன் மோகனா.* ஆனாலும் இந்த “தீரனியம்” நிலையத்துக்கு வந்த பின்னர் தனது மகன் நடக்கத் தொடங்கிவிட்டதாக அவர் கூறுகிறார். கொஞ்சக் காலத்தில் அவனை பேசவும் வைத்துவிடுவேன் என்று அவர் சவால் விடுகிறார்.

எல்லாவற்றிலும் பெரிய அவதி, தன்னுடைய குழந்தையை

ஆரம்பித்ததாக கூறும் பிரதர்ஸ் ஒவ் சரிட்டி மிஷனைச் சேர்ந்த அருட்சகோதரர் டபிள்யூ. எம். மைக்கல், ஆனாலும் சமூக மட்டத்தில் தமக்கு தார்மீக ஆதரவு போதாது என்கிறார். ஆனாலும் தாம் இதை தொடரப்போவதாக அவர் கூறுகிறார்.

இப்படியான சமூக சேவைகளுக்காகவே பெல்ஜியத்தில் 1826இல் தமது அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். பொதுச் சுகாதாரத்துறையில் சில தரப்பினரின் ஆதரவு தமக்கு போதவில்லை என்றும் அவர் அதிருப்தி தெரிவித்தார்.

இந்த நிலையத்தை இப்படியான குழந்தைகளுக்கான ஒரு சிறப்பு பள்ளிக்கூடமாக ஏற்பாடு செய்வதே தமது இலக்கு என்று கூறும் ஜூடி ஜெயக்குமார், இவர்களை கையாள்வதற்கான பயிற்சி பெற்ற பணியாளர்களை உருவாக்குவதே மிகப்பெரிய சவால் என்று கூறுகிறார். அந்தப் பணிக்கு தனித்துவமான சிறப்பு நிபுணத்துவம் தேவை.

புதிதாக அங்கு வந்த எங்களை அந்தக் குழந்தைகள் சில வேளை



எடுத்துக்கொள்வதையும் காணக்கூடியதாக இருந்தது.

அவர்களில் சிலர் எம்மை கண்ணுக்கு கண்ணாக நேரே பார்த்து பேசமாட்டார்கள். ஆனாலும், நாங்களும் உங்கள் குழந்தையே என்று அவர்கள் சொல்வது போல ஒரு மன உணர்வு அங்கு செல்பவர்களுக்கு ஏற்படுவதையும் மறுக்க முடியாது.

~~ எஸ். பரமேஸ்வரி ~~


### ஆட்கள் தேவை

எமது நிறுவனத்தின் பத்திரிகை மற்றும் வானொலியில் பணியாற்ற ஆர்வம் உள்ளவர்கள் தேவை.

முழுநேர மற்றும் பகுதி நேர பணியாளர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

பத்திரிகையில் செய்தி சேகரிப்பு, செய்தித்தொகுப்பு மற்றும் பக்க உருவாக்கம் ஆகியவற்றில் அனுபவம் உள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள். அனுபவம் இல்லாதவர்கள் பயிற்சியாளர்களாக கற்றுக்கொள்ளவும் முடியும். ஆனால், ஆர்வம் அவசியம்.

அதேபோன்று வானொலித் தயாரிப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சி வழங்குனர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு :
அரங்கம் நிறுவனம்,
227 பார் வீதி மட்டக்களப்பு.

தொலைபேசி :
070 345 68 00

# வாழ்வின் அற்புதங்கள் இவர்கள்

காலம் எனக்கு பல அற்புதமான மனிதர்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது. அதில் பலர் எதிர்பாராத நேரங்களிலும் காலங்களிலும் அறிமுகமானவர்கள். அவர்களில் சிலரையிட்டு நான் ஆச்சரியப்படுவதுண்டு. அவர்களைப்போல் என்னால் சாதிக்கமுடியுமா என்று நினைப்பதுண்டு. இல்லை என்பதுதான் உண்மை.

2012ம் ஆண்டு படுவான்கரையில் பல புனர்வாழ்வுபெற்ற போராளிகளைச் சந்தித்து அவர்களின் வாழ்வியற்ச் சிரமங்களை எழுதிக்கொண்டிருந்தேன். அந்நாட்களிற்தான் அவர் எனக்கு அறிமுகமாகினார்.

## ஒன்றாக போராடும் காதலர்கள் மகிழ்ச்சியை மட்டுமே காண்பர்

அவரை எனக்கு அறிமுகப்படுத்தியவர் எனது நண்பர். நாம் அன்று அவருக்காகக் காத்திருந்தோம். வெகுதூரத்தில் ஒருவர் மெது மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தார். அவரது உடல் ஒவ்வொரு பக்கத்திற்கும் ஆடிக்கொண்டிருந்தது. அவரது ஒரு கால் மற்றையதைவிட கட்டையானதாக இருந்தது என்பதை பின்பு அறிந்துகொண்டேன்.

முள்ளிவாய்க்காலின் பின் கொழும்பில் உள்ள தமிழரொருவரிடம் உதவியாளராக வேலை செய்திருக்கிறார். அவரது பாலியற்தொல்லைகளினால் அங்கிருந்து அகன்று இப்போது மட்டக்களப்பிற்கு இடம்பெயர்ந்திருந்தார். அவரது பெற்றோர் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தமையினால் பெண்களுக்கான ஒரு பாதுகாப்பான இடத்தில் வாழ்ந்திருந்தார்.

அவர் பல கை விரல்களை இழந்திருந்தார். வெடிபட்டு கால் உடைந்திருந்ததால் ஒரு கால் கட்டையாகவும், நெஞ்சுப்பகுதியில் குண்டுபாய்ந்திருந்ததால் சுவாசிப்பதும் சிரமாகவும் இருந்தது. யுத்தத்தில் கண்பாதிக்கப்பட்டதனால், கண்பார்வையும் மங்கத்தொடங்கியிருந்தது.

அவ்வளவு காயங்களுடனும் அவர் வாழ்வின் மீது கொண்டிருந்த நம்பிக்கையே எனக்கு பெரும் ஆச்சரியத்தைத் தந்தது. அன்று எமக்கு இருந்த பொருளாதார நிலையில் அவருக்கான விசேட சப்பாத்து செய்வதற்கும்;, கண்ணாடி செய்வதற்குமே எம்மால் உதவ முடிந்தது. சப்பாத்து செய்வதற்காக பணம் செலுத்தியபின் சப்பாத்துக்காக காத்திருந்தபோது சப்பாத்துக்கடைக்காரர் கடையை மூடிவிட்டு தலைமறைவாகினார். சப்பாத்தும் அவருடன் தலைமறைவானது.



அதன்பின் மீண்டும் அவரை சில மாதங்களின் பின் சந்தித்தபோது அவர் ஒரு போராளியை காதலிக்கத்தொடங்கியிருந்தார். அவருக்கு வெடிபட்டதனால் ஒரு கால் இயங்காதிருந்தது. அதன்பின்னான சில காலங்களின்பின் அவர்கள் திருமணம்செய்துகொண்டார்கள். உறவினர் ஒருவர் அவர்களுக்கு வீடு கொடுத்திருந்தார். கணவர் கூலிவேலைக்குச்செல்ல இவர் குழந்தைகளுக்கு மாலைநேரங்களில் கற்பித்துக்கொண்டிருந்தார். அவர்களது வருமானம் அவர்களுக்கு போதுமானதாக



இல்லை. கனடாவாழ் நண்பர் ஒருவர் இவர்களுக்கான சுயதொழில் செய்வதற்கு உதவமுன்வந்தார். உள்ளூரில் இருந்த ஒரு டாக்டர் தனக்கு அறிமுகமான ஒருவரிடமிருந்து ஒரு ஆட்டோ வாங்கிக்கொடுக்க முன்வந்தார்.

**முள்ளிவாய்க்காலின் பின்னும் தொடரும் போராட்டம் இது. ஆனால் வெற்றியை நோக்கியது**

இவர் மாற்றுத்திறனாளி என்பதால் ஆட்டோ சாரதிப்பத்திரம் எடுப்பதற்கு கொழும்புக்கு செல்லவேண்டியிருந்தது. இருவரும் கொழும்புக்கு வந்தார்கள். எனது சிங்கள ஆட்டோ நண்பர் இவர்களுக்காக இரண்டு நாட்களை செலவளித்தார். அவரும் தினக்கூலியில் வாழ்பவர். அவருக்கு இரண்டு நாட்களுக்கான பணத்தைக் கொடுத்தபோது "வேண்டாம், அவரை எனது சகோதராக நினைத்துக்கொள்கிறேன். பணம் வாங்குவதை எனது மனச்சாட்சி எற்றுக்கொள்ளாது' என்றார்.

ஒரு ஆட்டோவினை வாங்குவதற்கு கிடைத்த சிறு உதவியை மூலதனமாகக்கொண்டு வாழ்க்கை ஆரம்பித்தார்கள் அவர்கள். கணவர் ஆட்டோ ஓடினார். அவர் கற்பித்தார், கோழி வளர்த்தார். அரச உதவியில் வீட்டுகட்ட உதவி கிடைத்தபோது இருவரும் இணைந்தே வீட்டைக் கட்டிக்கொண்டனர். மண் அள்ளுவதில் இருந்து சீமெந்து பூசுவதுவரை அனைத்தையும் தங்களுடைய அங்கவீனங்களையும் பொருட்படுத்தாது செய்துகொண்டனர். வீடு குடிபுகுந்து சில மாதங்களில் முதல் குழந்தைபிறந்தது.

நான்கு ஆண்டுகளுக்கு பின்னான இன்று அவர்கள் இரண்டு குழந்தைகளுடன் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் கடந்துகொண்டிருக்கிறார்கள்.

மாற்றுத்திறனாளிகளான இருவரால் இந்த சமூகத்தில் முன்னேறி வாழ்ந்து காட்டமுடியும் என்பதற்கு இவர்கள் முன்னுதாரணமாக இருக்கிறார்கள். அவர்களின் மன உறுதியும், முன்னேறவேண்டும் என்ற விடாமுயற்சியுமே அவர்களை இன்று வாழவைத்திருக்கிறது என்பதில் எனக்கு ஐயமே இல்லை.

~~ சஞ்சயன் செல்வமாணிக்கம் ~~

# பாரிசவாதத்தில் இருந்து மீள முயற்சிக்கும் குழந்தைகளின் மூளை

பிறக்கும் போது பாரிச வாதத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில், அந்தக் குழந்தைகள் தமது வாதத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு பதிலாக எவ்வாறு மூளையின் இன்னுமொரு பகுதியை பயன்படுத்தி தாக்குப் பிடிக்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.



இதனை அவை மொழிகளை கற்க பயன்படுத்துகின்றன.

தமது கண்டுபிடிப்பு பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட பெரியவர்களுக்கு சிகிச்சைவழங்க உதவும் என்று ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் இந்த ஆய்வை செய்தவர்கள் கூறியுள்ளனர்.

சிறிய குழந்தைகளுக்கு பாரிசவாதத்தினால் தாம் இழந்ததை மீள தயாரித்துக்கொள்ளும் அதீத சக்தி இருப்பதாக பிரிட்டனை சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

4000 குழந்தைகளில் ஒன்று பிறப்பின் போதோ அல்லது அதற்கு சற்று முன்னதாகவோ ஏற்படும் பாரிசவாதத்தால் பாதிக்கப்படுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

சிறிய குழந்தைகளின் மூளையின் இழுபடும் தன்மை, அவை பெரியவர்களை காட்டிலும் வேகமாக பாரிசவாதத்தில் இருந்து விடுபட உதவுகின்றன.

வளரும் நிலையில் உள்ள காரணத்தினாலும் அவை நாளாவட்டத்தில் சுகமாகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.










# மட்டக்களப்பில் "தற்கொலைகள்" அதிகரிக்கின்றன?

மட்டக்களப்பு கல்லடியில் பரீட்சையில் இரு பாடங்களை தவறவிட்டதால் ஒரு மாணவன் தற்கொலை செய்து கொண்டதாக சமூக ஊடகங்களில் கடந்த வாரம் பரபரப்பாக பேசப்பட்டது.

அண்மைக்காலங்களில் இப்படியாக செய்திகள் வருவதும், அதுபற்றி அவ்வப்போது சமூக ஊடகங்களில் பல தரப்பாலும் கவலை வெளியிடப்படுவதும் கவனத்துக்கு வந்து கொண்டே இருக்கின்றன.

கல்லடிப் பாலமும், கன்னா மர பழமும், அலரி விதையும், பூச்சி மருந்தும், தூக்குக்கயிறும் அவ்வளவு ஏன் கட்டுத்துப்பாக்கியும் கூட இங்கு தற்கொலை செய்துகொள்ள பயன்படுத்தப்படுகின்றன.

புதிதாக அருகில் ஒரு அழகான பாலம் கட்டப்பட்ட பின்னரும் கூட கல்லடியின் பழைய பாலம் ஏதோ உயிர்களை காவுகொள்ளும் ஒரு பூதம் போல பரிகாசிக்கப்படுகின்றது.

## போதுமான தகவல் இல்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலை வீதம் அதிகரித்து விட்டது என்று பரவலாக பேசப்பட்டாலும் அது குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் பெரிதாக கிடைக்கவில்லை. குறுகிய கால எல்லைக்குள் "இத்தனை" என்று ஓரளவுக்கு தகவல்கள் இருந்தாலும் தற்கொலை வீதம் அபரிமிதமாக வளர்ந்துவிட்டது என்று உறுதியாகக் கூற அது போதவில்லை. எப்படியிருந்தாலும் இந்தப் பிரச்சினை எல்லோர் மனதையும் மிகவும் ஆக்கிரமித்த, ஆட்டிப்போட்ட ஒன்றாக இருந்து வருகின்றது என்பதில் சந்தேகமில்லை.

அதனால் இதற்கான காரணகாரியங்களை ஆராய உரியவர்களை தேடவேண்டியிருந்தது. மட்டக்களப்பு மாவட்ட உளநல வைத்திய நிபுணரான டாக்டர். த. கடம்பநாதனை தொடர்புகொண்டோம்.

அவர் சொன்ன தகவல்கள் ஒரு புறம் சுவாரசியமாக இருந்த அதேவேளை, மறு புறம் அதிர்ச்சி தருவனவாகவும் இருந்தன. முடிந்த வரை அவர் சொன்னவற்றை அவரது கூற்றிலேயே, ஆனால் பத்திரிகைகான பாணியில் இங்கு தர முயற்சி செய்கிறோம்.

மட்டக்களப்பில் தற்கொலைகள் எவ்வளவு நடந்தன என்பது பற்றிய அதிகாரபூர்வ தகவல்கள் இல்லை. ஆனால், தற்கொலை முயற்சிகள் பற்றி, அதுவும் அதிகளவில் இளைஞர்கள் அதற்கு முயற்சிக்கின்றார்கள் என்பது பற்றி உளநலத்துறையை சேர்ந்தவர்கள் என்ற வகையில் எம்மால் கூறமுடியும்.

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாத, அவற்றை ஆராய்ந்து அலசி தீர்வு காண பக்குவம் அற்ற இளைஞர்களே அதிகம் தற்கொலைக்கு முயல்கிறார்கள். தற்கொலையை முழுமையாக செய்ய முடியாமல் அதில் தோல்வியுற்றவர்களுடன் பேசியதில் கிடைத்த தகவல்களே இவை.

சிறிய காரணங்களுக்காக, உதாரணமாக அம்மா ஏசிவிட்டார், காதலி பேசவில்லை, பரீட்சையில் தவறிவிட்டேன் என்பவை போன்ற மிகச் சிறிய காரணங்களுக்காகவே பலர் தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

## பிரச்சினைக்கான தீர்வு தொடுவானமாகிவிடலாம்

வெற்றி தோல்வியை தாங்கும் பக்குவமின்மை முதன்மையான காரணமாக இருக்கின்றது. முறைசாரா வகையில் தோல்விகளை சந்திப்பதற்கான பக்குவத்தை பள்ளிக்கூடங்களில் விளையாட்டுக்கள் தரும். ஆனால் கல்விப் போட்டி காரணமாக, தனியார் ரியூசனுக்காக பெற்றோரால் அழுத்தத்துக்கு உள்ளாக்கப்படும் மாணவர்கள் விளையாட அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் தோல்வியை ஏற்கும் பக்குவத்துக்கான




பயிற்சி அவர்களுக்கு இல்லாமலேயே போய்விடுகின்றது. இது ஒரு காரணம்.

பரீட்சையில் தேறுவது என்பது ஒரு குடும்ப கௌரவத்தையே பாதிக்கும் செயலாக இங்கு பார்க்கப்படுகின்றது. பரீட்சையில் தோல்வியடைந்தால் தாய் பேசமாட்டார், தந்தை பேசமாட்டார் என்கிற நிலைமை உள நெருக்கடியை ஆழமாக்குகின்றது. இவையெல்லாம் அடிப்படை பொறிமுறையிலேயே உள்ள பிரச்சினைகள். இவற்றால் பாதிக்கப்பட்டவரை அடையாளம் காண்பதே சிரமம். இதனால், தற்கொலை முயற்சிகளை தடுக்க முடியாது போய்விடுகின்றது.

## நாடகத்தொடர்களின் பாதகமான செல்வாக்கு

தற்போதெல்லாம் அண்டை நாட்டில் இருந்து வரும் நாடகத்தொடர்கள் தற்கொலைக்கான முறைகளை பரீச்சயமாக்கிவிடுகின்றன. தற்கொலை எப்படி செய்வது என்பதை அவை கிட்டத்தட்ட ஒரு பாடமாகவே செய்து காண்பிக்கின்றன. இதனால், தோற்றால் இதுதான் வழி, இதனை இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற மனப்பாங்குக்கு இளைஞர்கள் தள்ளப்பட்டுவிடுகிறார்கள்.

இப்படியாக ஊடகங்களின் பாதகமான ஆளுகைக்கு இவர்கள் உள்ளாகும் மட்டம் 85 வீதத்தை கடந்துவிட்டது என்று கூடக் கூறலாம்.


சமூக ஊடகங்களும் இங்கு விமர்சனத்துக்கு உரியவையே.

(அண்மையில் ஒரு தமிழ் பெண் தற்கொலை செய்து கொள்வது போன்ற காட்சி வீடியோவாக சமூக வலைத்தளங்களில் உலாவந்தது.)

தற்கொலை பற்றி நிறைய பேசுவதும், அதனை செய்யக்கூடாது என்று நேரடியாக பிரச்சாரம் செய்வதும் கூட சில சமயங்களில் பாதகமான விளைவை தரலாம். அதுவே தற்கொலைக்கு தூண்டும் காரணியாகிவிடவும் முடியும்.

ஆகவே மூன்று வழிகளில் இந்த பிரச்சினையை கையாள முயற்சிக்கலாம். குடும்பக்கட்டுமானங்களில் பிரழ்வு அதிகரித்த தற்கால சமூகத்தில் குடும்ப உறவுகளை மேன்மையாக கட்டியமைக்க முனைய வேண்டும்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான தொடர்பாடலை அதிகமாக்க வேண்டும். அதனை சுமூகமாக்கவும் வேண்டும். சிறிய வயதில் பெற்றோரால் கடுமையாக கட்டுப்படுத்தி வளர்க்கப்படும் ஒரு குழந்தை பத்தாம் வகுப்புக்கு வரும் வயதில், தான் பெரியவனாக வளரும் நிலையில், பெற்றோர் கட்டுப்பாட்டிலிருந்து வெளிவரும் நிலையில் அதற்கான எதிர்வினையை காண்பிக்க தொடங்குவான். அது பாதகமான வெளிப்பாடாக இருக்கும்



Dr. Gadampanathan

**"தோல்வியை ஏற்கும் மனதை தரும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க பிள்ளைகள் அனுமதிக்கப்படுவதில்லை"**

வாய்ப்பும் கட்டுப்படுத்தப்பட்ட குழந்தையில் மிக அதிகம்.

நுண்கடன் வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடும் இங்கு ஏனைய பல மாவட்டங்களை போல தற்கொலைக்கான காரணியாக மாறியிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டம் வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள ஒரு மாவட்டம். அப்படியான ஒரு மாவட்டத்தை நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் இலக்கு வைக்கின்றன என்றால் காரணம் தவறானதாகத்தானே இருக்க வேண்டும் என்கிறார் டாக்டர் கடம்பநாதன்.

உண்மையில் தீர்வுக்கான வழிகள் மிகவும் அருகில் இருப்பது போலத்தான் தென்படுகின்றன. ஆனால், அவை தொடுவானமோ என்ற அச்சமும் எழாமலில்லை.

~~ பவித்திரன் மணிசேகரன் ~~

# கிழக்கு மாகாணத்தின் வடக்கு எல்லைக்கிராமம்

## தென்னன் மரபடி (தென்னமரவாடி)

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கெல்லையாக உள்ள இக் கிராமம் வரலாற்றுத் தொன்மையும் கலாசார சிறப்பும் செழிப்பான வனப்பும் நிறைந்தது.



குளங்களும் வயல்களும் சூழ கடலும் கழிமுகமுமாய் இயற்கையின் வளங்களை கொடையாய் பெற்ற கிராமம் இது.

தென்னன் மரபடி என்பதே தென்னமரவாடியாக திரிபடைந்ததாகவும் தென்னன் என்கிற மன்னன் இப் பிரதேசத்தை ஆண்டதாகவும் அவன் வழி வந்தவர்கள் தாம் என இம் மக்கள் தம் வரலாற்று பழமையயை நினைவு கொள்கின்றனர்.

இங்கு கிடைக்கும் எஞ்சியிருக்கும் அழிபாடுகளுடனான தொன்மை எச்சங்கள் இக் கிராமத்தின் வரலாற்றை நமக்கு சொல்கின்றன.

தென்னமரபடி சில தனித்துவமான பண்பாட்டு அம்சங்கள் கொண்ட கிராமம்,


1982ல் என்னுடய நண்பன் உறவினன் கிளியனுடன் கடைசியாக சென்று வந்த நினைவுகள் .அப்போது எல்லா வளமும் கொண்ட ஒரு கிராமமாய் இருந்தது.

இங்கு பேசப்படும் வழக்கு மொழி ஈழத்தமிழர்களின் ஏனைய பிரதேசங்களிலிருந்து வேறு பட்டது.தமிழின் அழகு இவர்கள் மொழியில் கேட்பது ஒரு அற்புத அனுபவம் அவ்வளவு அழகு இவர்கள் தமிழுக்கு.

வருடம் தோறும் காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து என்பன ஆடப்பட்டதாகவும் அத்தோடு திருவிழாக் காலங்களில் வேதாள ஆட்டம் ஆடப்பட்டு வந்தது இலங்கையில் இங்கு மட்டுமே இந்த ஆட்டமுறை காணப் பட்டது. இந்த ஆட்ட முறையயை நாம் மீட்டுருவாக்க வேண்டும்.

இக்கிராம மக்கள் தம் திருமண சம்பந்தம் தொடர்பாக திருகோணமலை, தம்பலகாமம், சேனையூர், கட்டைபறிச்சான், வல்வெட்டித்துறை ஆகியவற்றோடு நெருக்கமான உறவை பேணி வந்தனர்.

வரலாற்றில் ஒரு காலத்தில் அடங்காப் பற்று வன்னிபங்களில் ஒன்றாய் தென்னபரபடி விளங்கி வந்திருக்கிறது.



கொழும்பில் உள்ள ஆவணச்சுவடிகள் நிலையத்தில் பேணப்படும் கொம்பனி அரசாங்கத்துக்கும் வன்னிபங்களுக்குமான உடன்படிக்கை.

1.இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார்.1722ம் ஆண்டு

2.சண்முகப் பெருமாள் சேதுகாவல வன்னியனார்.1738ம் ஆண்டு

3.சேதுகாவல மாப்பாண வன்னியனார்.1745ம் ஆண்டு

ஆகிய தென்னமரபடி வன்னிபங்களைப் பற்றிப் பேசுகிறது.

ஆக தென்னமரபடிப் பிரதேசம் தமிழர்களின் தொன்மை நிலங்களில் ஒன்று.



இன்று இம் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.ஒரு காலத்தில் மிக வசதியாக வாழ்ந்த இவர்கள் இன்று வாழ்வாதாரத்துக்கு வழியற்றவர்களாக உள்ளனர்.

தென்னமரபடி பிள்ளையார் கோயில் பற்றி திருக்கோணமலை திருக்கோயில்கள் எனும் நூலில் பின்வரும் குறிப்புகள் காணப் படுகின்றன.

"இக்கோவில் கிழக்கு மாகாணத்தின் வடக்கெல்லையில் திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைப் பட்டினத்திலிருந்து 73 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. இவ்வாலயத்திற்கு கிழக்குத் திசையில் கடற்கரையோரமாகவுள்ள மலையொன்றில் ஒரு சிவன் கோவில் இருந்ததற்குரிய இடிபாடுகளும் சிதைவுருவங்களும்



காணப்படுகின்றன. இக்கோவில் கருங்கற் திருப்பணியாய் இருந்ததற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன.""

தென்னமரவாடிப் பிள்ளையார் கோவிலுக்கு தென்மேற்கே பறையன் ஆற்றுக்கு அப்பால் மணற்கேணி எனும் இடமுள்ளது. அங்கு சைவ ஆலயமொன்று இருந்து சிதைந்து போன இடிபாடுகளும் காணப்படுகின்றன. தென்னமரவாடி பண்டைக்காலத்தில் தென்னன்-மரபு-அடி என்பது தென்னன்மரபுஅடி ஆக இருந்தது தென்னமரவாடியாக திரிந்து வழங்கி வருகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் பாண்டிய மன்னர்களின் ஆட்சி நடைபெற்று வந்தமைக்கு வரலாறு காணப்படுகின்றன. கோணேசர் கல்வெட்டு மீன் இலட்சினை பொறிக்கப்பட்ட கற்தூண்கள் இதற்கு நான்றாக அமைகின்றது. செம்பயனாறு எனும் ஊர்ப் பெயரும் பாண்டிய மரபு வழிப் பெயராகும்.

தென்னவரவாடியைச் சுற்றியுள்ள இடங்களைப் பற்றிய வரலாறுகள் காலத்தால் மறைந்தும், மறைத்தும் கொண்டுமிருக்கின்றன. தமிழ் மக்களும் சைவசமயமும் இங்கெல்லாம் பரவியிருந்ததென்பதை நினைவு கூர்வது சாலமும் பொருத்தமாயிருக்குமெனக் கருதுகின்றேன்.

தென்னமரவாடியைச் சுற்றிப் பறையன் குளம், பறையனாறு, பறையன்வெளி,



பறையனோடை எனும் இடங்கள் பழைய வரலாறொன்றைக் கூறுகின்றது. பறையனாறு பதவியா குளத்திலிருந்து உற்பத்தியாகிக் கிழக்கேயோடித் தென்னமரவாடிக்கருகாமையில் கடலில் சங்கமமாகின்றது.

தற்போது பதவியா என்றழைக்கப்படும் இடத்தில் முற்காலத்தில் சைவத்தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். தமிழ் மன்னராட்சிக்குள் அந்தப் பிரதேசம் இருக்கின்றது. 1965ம் ஆண்டு புதைபொருளாராட்சியாளர்கள் அந்தப் பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சி செய்தபோது ஒரு தங்கப்பதக்கம் கண்டெடுக்கப்பட்டது. அதனை ஒரு பட்டயமென்றும் கொள்ளலாம். வட்டவடிவமான அந்தப் பதக்கத்தில் நடுவில் நந்தியும்,அதற்கிரு பக்கங்களிலும் இரண்டு குத்து விளக்குகளும் மேற்பக்கம் இரண்டு

சாமரைகளும் பொறிக்கப்பட்டு கீழ்ப்பக்கத்தில் "மகேஸ்வரப10மி ஸ்ரீபதிக்கிராமம் பிராமணர்களுக்கு தானம் செய்யப்பட்டது" என்று எழுதப்பட்டிருந்தது. புதைபொருளாராட்சியாளர்களால் எடுத்து செல்லப்பட்ட இந்தப்பதக்கம் தொல்பொருட்காட்சி சாலையில் இருக்கலாம். இதனை விட சிவலிங்கங்களும்,சிவன்,அம்பாள் விக்கிரகங்களும் இங்கு கிடைக்கின்றன. பதவியாவிலுள்ள மெரறக்காவ, தித்தக்கொணவ,காட்டுக்கொல்லாவ, ஏராமடு என்னுமிடங்களில் பிள்ளையார் விக்கிரகங்கள் காணப்படுகின்றன.

இந்த பதவியாவைத் தமிழ் மன்னரொருவன் ஆண்ட காலத்தில் பகையரசனொருவன் படையெடுத்து வந்தானாம். மாற்றரசனுடைய படையெடுப்பைத் தடுக்க நினைத்த மன்னன் பதவியாக் குளத்தின் குளக்கட்டைக் "கொழுமோர்" காய்ச்சி ஊற்றி உடைக்கும் படி ஆணையிட்டானாம். கொழுமோர்ப் பிரயோகம்,கற்பாறைகளையும் உடைக்கும் பண்டைக்கால விஞ்ஞானப் பிரயோகம் அதாவது குளக்கட்டில் நெருப்பை எரித்து சூடேற்ற வேண்டும். நன்கு சூடேறிய பின் அந்த இடத்தில் மோரைக்கரைத்து ஊற்ற வேண்டும். அப்படிச் செய்யும் போது குளக்கட்டில் வெடிப்பு ஏற்படும். இப்படி செய்த போது குளக்கட்டு வெடித்து நீர் கசிந்து ஓடத்தொடங்கியது. அது பெரிய குளமாதலால் குளத்திலுள்ள பெரிய மீனொன்று வெடிப்பை அடைத்துக்கொண்டதாம். அந்த மீனை வெட்டி வெளியேற்றும் படி அரசர் ஆணையிட்டாராம். இதனை செய்ய அஞ்சி யாரும் முன்வரவில்லை. ஒரு பறையன் துணிந்து முன் வந்தானாம். அதனைச் செய்யும் போது வெள்ளம் புரண்டு தன்னை அள்ளிக் கொண்டு போகும் என்பதை உணர்ந்த அவன் தனது அங்கங்கள் எங்கெங்கு கிடக்கின்றனவோ அங்கெல்லாம் தன் பெயர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பறையன் அந்த மீனை வெட்டி குளத்தை திறந்தான். வெள்ளம் புரண்டு பறையனை அள்ளிக் கொண்டு சென்று சிதைத்துத் தள்ளியது. மாற்றான் படையும் சிதைந்து அழிந்ததாம். பறையன் கேட்டுக் கொண்டபடி அவனுடைய அங்கங்கள் சிதறிக்கிடந்த இடங்களுக்கு பறையன்குளம், பறையன்வெளி, பறையனோடை, பறையனாறு என்று பெயரிடப்பட்டதாக திரியாயில் ஓய்வு பெற்ற கிராமத்தலைவர் திரு.சி.பூ.பொன்னம்பலமவர்கள் தகவல் தந்துதவினார்கள். இந்தப் பறையனாறுதான் தென்னமரவாடிப் பிள்ளையார் கோவிலுக்குச் சமமாக ஓடுகின்றது. இதுவே கிழக்கு மாகாண எல்லையாகும்"

1984ல் இக் கிராமம் அடித்து நொருக்கப் பட இங்கு வாழ்ந்த பல நூறு குடும்பங்கள் உயிருக்கு பயந்து தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்த தம் வாழ்விடத்தை விட்டு தங்கள் உறவினர்கள் வாழும் முள்ளியவளை,தண்ணீரூற்று,செம்மலை ஆகிய கிராமங்களுக்கு பெருமளவிலும் திருகோணமலை தம்பலகாமம் போன்ற இடங்களுக்கும் இடம் பெயர்ந்தனர் .26 வருடங்களுக்குப் பின்பு ஐ,நா உதவித் திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு மீள் குடியேறினர் .இன்றுவரை சரியான அடிப்படை வசதிகள் இல்லாமலேயே இம் மக்கள் வாழ்கின்றனர்.

~~

பால.சுகுமார்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

~~








மர்மம் என்னும் சொல்லானது oxford dictionary க்கு இணங்க 'ஒரு விடையத்தினை விபரிப்பதற்கு அல்லது விளங்குவதற்கு கடினமானதாகவும் சாத்தியமற்றதாகவும் உள்ளது' எனவரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இதை வெளிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கம் கொடுக்கப்பட வேண்டும். இங்கு சொல்லப்படும் மர்மமானது மட்டக்களப்பின் சின்னமாக கருதப்படும் மட்டக்களப்பு வாவியின் மிக விசேடமான பாடும் திறமை ஆகும்.

இவ் வாவியானது 56மஅ நீளமுடையது. வடக்காக ஏறாவூர்(மட்டக்களப்பு மாவட்டம்) தொடக்கம் தெற்கில் கல்முனை(அம்பாறை மாவட்டம்) வரையும் நீண்டுள்ளது. வாவி என்பதை வரையறுப்பதற்காக அது கடலுடன் கலக்கின்றது. மட்டக்களப்பு வாவியானது 200அ விஸ்தீரமான இரண்டு குறுகிய இடங்களில் திறக்கின்றது. இதில் ஒன்று வாவியின் தெற்கு முனையில ;உள்ளது. இது ஓந்தாச்சிமடம், கல்லாறில் இரு கிளைகளைக் கொண்டுள்ளது. மற்றையது வாவியின் மத்திய பகுதியில் மட்டக்களப்பு நகருக்கு அருகிலுள்ள பாலமீன்மடுவில் உள்ளது.


வரலாற்றில் இந் நிகழ்வானது Britannica Encyclopedia இல் நன்றாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. சரியான ஆவணப்படுத்தல் 1840ற்குப் பிறகு தொடங்கியது. உள்நாட்டு மக்கள் இதற்கு முதலே இந் நிகழ்வை நன்றாக அறிந்திருந்தனர். 18ம் மற்றும் 19ம் நூற்றாண்டின் முன்னைய காலப்பகுதியில் பல்வேறுபட்ட மக்கள் இந் நிகழ்வைப்பற்றிய ஆராய்ச்சிகளில் ஆர்வம் காட்டினர்.

வாவியின் குறிப்பிட்ட பகுதிகளில் மாத்திரம் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் கேட்கக்கூடியதுமான ஒரு சங்கீதமாக இருப்பதனாலும் ஆகும்.



1800ல் ஆவணப்படுத்தப்பட்ட நாட்களில் இருந்து இதை சங்கீதமாக கருதினார்கள். 1845ல் Sir James Emerson Tennot இதை மட்டக்களப்பின் சங்கீத மீன்கள் எனக்குறிப்பிட்டுள்ளார். தண்ணீரில் இருந்து எழுந்த இச்சத்தத்தை தெளிவாகக் கேட்டதாகவும் , இது நாண்களின் இதமான அதிர்வை அல்லது வைன் கோப்பைகளின் ஓரங்களை குளிர் கரங்களால் தேய்க்கும் போது தோன்றும் வலுவற்ற அதிர்வை ஒத்ததாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இது ஓர் உறுதியற்ற இராகம் எனவும் இங்கு தமக்குள்ளே முற்றிலும் வேறுபட்ட, தெளிவான அதிக




இதில் துநளரவை அளைளழைடயெசல களும் உள்ளடங்குவர். இயற்கையில் ஈடுபாடுடைய ஜப்பானைச் சேர்ந்தவர்களும் இந் நிகழ்வின் அனுபவத்தைப் பெற இங்கு வருகை தந்தனர். இந் நேரத்தில் சர்வதேச ஆராய்ச்சியாளர்களுடன் சுவாமி விபுலானந்தரும் இந் நிகழ்வில் தமது முக்கிய நேரத்தை செலவழித்துள்ளார். உள் நாட்டைச்சேர்ந்த இயற்கை ஆர்வலரான Mr.S.V.O.Somanadar மேற்கிலிருந்த நிபுணர்களுடன் இணைந்து பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். ஒவ்வொருநிகழ்வின் போதும் இச்சத்தத்தின் விவரணை சமமாகவே இருந்துள்ளது.


இவ் ஆய்வில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் இந் நிகழ்வை ஒரு விசேட நிகழ்; வாகவே குறிப்பிடுகின்றனர். ஏனெனில் இது நீரினுள் இருந்து வருவதனாலும் எண்ணிக்கையான ஓசைகள் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

Lord Holden என்பவர் தமது ஆய்வு புத்தகத்தில் இச் சத்தத்தை வயலின் 'பு' நாணின் ஓசையை நினைவுபடுத்தியதாக கூறியுள்ளார். மேலும் , இச் சத்தங்களிற்கும் சங்கீத உபகரணங்களின் சத்தங்களிற்கும் ஒற்றுமை உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

Mr.Stanly Green என்பவர் இவ் ஓசையானது உநடடழ என்னும் இசை உபகரணத்தின் இராகத்தை ஒத்ததாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

Rev Fr. Lange என்பவர் இவ் ஓசையை ஈக்கள், வண்டுகளின் ரீங்காரம் மற்றும் தாழ் சுருதியில் எழுப்பப்படும் தவளையின் முணுமுணுப்பை போன்று உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் ஆங்கில ஆசிரியராக இருந்த Mrs. Del Marmol என்பவர் இது வெறும் இன்னிசை அல்ல எனவும் இதில் சீராக வேறு படுத்தக்கூடிய தெளிவான இராகமாக இருப்பதாகவும் கூறியுள்ளார்.



### Ceylon and the Underwater Archaeologist

Rodney Jonklassb என்பவர் இவ் ஓசையை பற்றி பல பகுதிகளாக பிரித்து நீரிற்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இவ் இசையானது நீரின் ஆழத்தில் தங்கியுள்ளது என கண்டறிந்தார். ஆழமானபகுதியில் அதிக சத்தத்தை உடையதாகவும், இது சங்கீத இராகத்திலிருந்து முணுமுணுப்பான சத்தத்திற்கு மாற்றமடைவதாகவும் மற்றும் நடுப்பகுதியில் முணுமுணுப்பானசத்தத்தை மட்டும் கேட்டக்கூடியதாக இருப்பதாகவும் கண்டறிந்தார்.

இதிலிருந்து இங்கு இரு வகை சத்தம் உள்ளதெனவும், ஒன்று முணுமுணுப்பான சத்தம் மற்றையது மிக ரம்மியமான சத்தம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் நூலில் இந் நிகழ்வைப் பற்றி 'நீர் மகள்'என்னும் பாடல் உள்ளது.

இது வரை அனைவரும் இதை ஓர் சத்தமல்ல, இது ஓர் இசை என ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இங்கு முக்கிய கேள்வி இச் சத்தத்தை எழுப்புவது எது என்பதாகும். சிலர் இது மீன்களால் நிகழ்வதாக நம்பினார்கள். ஆராய்ச்சியாளர்கள் வாவியின்; அடிப் பரப்பில் ஆயிரக்கணக்கான மீன்கள் ஒன்று கூடி சத்தத்தை உருவாக்குவதாக கூறுகின்றனர். ஆனால் இங்கு எழுப்பப்படும் சத்தத்தின் இசைத்தரம் கேள்விக்குரியதாக உள்ளது.


இச் சத்தங்கள் பல வகைக்குரியதாக உள்ளது. அதாவது பொப் சத்தம், கிளிக் சத்தம், விசில் சத்தம், உறுமல் சத்தம், முனகல் சத்தம் , முணுமுணுப்புசத்தம்,

ரீங்காரசத்தம் போன்றவற்றை கொண்டதாக உள்ளது.

மீன்களானது தமது துணையைக்கவர்வதற்காகவும், ஆபத்தை அறிவிப்பதற்காகவும், எதிரியை பயமுறுத்துவதற்காகவும் சத்தத்தை எழுப்பகின்றன.

நீந்தும் மீன்களில் உள்ள சிறு நீர் பையானது பல மீன்களில் ஒலி எழுப்பக் காரணமாகும். அனேகமான மீன்களில் இப் பையானது காற்றினால் நிரப்பப்பட்டு வயிற்றுக் குழியினுள் அமைந்துள்ளது.

குடம்பிகளும், முட்டைகளும் செறிந்த அதிகமாக உணவு கிடைக்கும் பகுதிகளில் மீன்கள் ஒன்று சேரும். அங்கு தொடர்பாடலுக்காக ஒலி எழுப்புகின்றன. விசேடமாக இரவு நேரத்தில் நீரானது இருண்டதாகவும் தெளிவு குறைவானதாகவும் உள்ள போது ஒலி எழுப்பப்படுகின்றது.



~~

நன்றி சயன்ஸ்
நவிகேட்டர்ஸ்

~~





# மட்டக்களப்பு டச்சுக் கோட்டை பௌத்த விகாரையா?

போர்த்துக்கேயர் இலங்கைத் தீவு நிரந்தரமாக தமது காலனித்துவத்துக்குள் கொண்டு வந்துவிட்டதென நம்பி நாட்டின் முக்கிய கரையோர கேந்திர இடங்களிலெல்லாம் தமது பலமான கோட்டைகளை நிறுவினார்கள். அந்த வரிசையில் மட்டக்களப்பு வடக்கு மன்முனை பிரதேச செயலாளர் பிரிவில் கடலை அண்மித்து புளியந்தீவில் வாவி சூழ்ந்த பகுதியில் அமைத்த கோட்டை மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. மட்டக்களப்பின் காலனித்துவ அரசியல் வரலாற்றின் ஒரு வடிவமாக இந்தக் கோட்டை இன்றும் திகழ்கிறது.

1628இல் போர்த்துக்கேயரால் அமைத்து முடிக்கப்பட்ட இந்தக் கோட்டையை போர்த்துக்கேயரால் 10 ஆண்டுகள் கூட தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியவில்லை. போர்த்துக்கேயரை விரட்டியடிக்க கண்டி அரசன் ராஜசிங்கன் ஒல்லாந்தரை நாடினான். அதன் விளைவு 18.05.1638 இல் அக் கோட்டையை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.

ஒல்லாந்தர் அதனை அழித்து புதிய வடிவில் மீண்டும் கட்டி அங்கேயே தங்கினர். 1766இல் கண்டி அரசுக்கு விட்டுக்கொடுத்தனர். 1796 இல் இக்கோட்டை ஆங்கிலேயர்களால் எந்தவித எதிர்ப்புமின்றி கைப்பற்றப்பட்டது.





ஆகவே மூன்று காலனித்துவ நாடுகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்த கோட்டை என்கிற சிறப்பு இந்த கோட்டைக்கு உண்டு. தமது வர்த்தக மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை அங்கிருந்துதான் அவர்களெல்லாம் மேற்கொண்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தக் கோட்டைக்குள் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆலவட்டக் கல்லும், ஆசனக் கல்லும் இருப்பதாகவும், ஆகவே இந்தக் கோட்டை அமைப்பதற்கு முன் இங்கு பௌத்த விகாரை இருந்ததற்கான தடயங்கள் உள்ளது என்றும் தொல்பொருள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் கூட குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இங்கு இருந்த பௌத்த விகாரையை அழித்துத்தான் அங்கு இந்த கோட்டை கட்டப்பட்டதாக சிங்கள-பௌத்த தேசியவாதிகளின் நூல்களிலும், கட்டுரைகளிலும் குறிப்பிடுகின்றனர். தமிழ் வரலாற்று ஆய்வாளர்கள் தரப்பில் இது பற்றிய ஸ்தூலமான வாதங்கள், அல்லது விபரங்கள் இல்லாமையினால் மேற்படி சிங்கள – பௌத்த தரப்பு வாதங்கள் பலமாக நிறுவப்பட்டு வந்திருக்கின்றன.

மட்டக்களப்பு என்கிற பெயர் கூட "பலகொட்டுவ" (கோட்டை) என்கிற சிங்களப் பெயரில் இருந்து தான் வந்தது என்று பல சிங்கள நூல்களில் காணக்கிடைக்கின்றது. அப்படி ஒரு புனைவை விக்கிபீடியா போன்ற இணைய கலைக்களஞ்சியங்களிலும் கூட (முடிந்தவர்கள் Batticaloa fort என்கிற தலைப்பிலுள்ள Wikipedia கட்டுரையையும் பார்க்க) பதிவு செய்திருக்கின்றனர்.

சமீபகாலமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் பௌத்த தொல்பொருள் சான்றுகள் கிடைத்து வருகின்றன என்று கூறி தமிழ் - முஸ்லிம் சமூகங்களுடன் வம்பிழுக்கும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதை அறிவோம்.


பௌத்த சான்றுகள் கிடைப்பதை புனைவாக பார்க்க வேண்டியதில்லை. ஏனென்றால் பெரும்பாலான சான்றுகள் உண்மையானவையே. ஆனால் இதில் ஒரு அரசியல் சிக்கல் உண்டு. பௌத்தத்தை சிங்களத்துடன் கோர்த்து விடுவது தான் முதல் சிக்கல். அதன் மூலம் இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்றும், தமிழர்களின் தாயக பிரதேசமாக வடக்கு கிழக்கை கொள்ள முடியாது என்கிற வாதத்தை நிறுவதற்கும் தான் இத்தகைய புதைபொருள் சான்றுகள் சிங்கள பௌத்த தரப்புக்கு அவசியப்படுகின்றன.
மாறாக இலங்கையில் "தமிழ் பௌத்தம்" என்கிற ஒன்றும் இருந்தது என்பதும் சிங்கள மக்கள் பெருவாரியாக வாழ்ந்த பிரதேசங்களில் சிங்கள பௌத்தம் போல தமிழர்கள் பெருவாரியாக வாழ்ந்த பிரதேசங்களில் தமிழ் பௌத்தம் நிலவியது என்பதும் மறக்கடிகப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகிறது. தமிழர்களும் தமக்கும் பௌத்தத்துக்கு இருந்த உறவை பலமாக நிறுவாததும், அப்பேர்பட்ட பௌத்தத்தை கைவிட்டதும், இந்துத்துவத்தினதும், சைவத்தினதும் செல்வாக்கின் காரணமாக பௌத்தத்தை தள்ளி வைத்ததும் இதற்கு முக்கிய காரணம் தான். இலங்கையில் தமிழர்கள் பலர் சமணர்களாகவும், பௌத்தர்களாக இருந்ததையே ஆச்சரியமாகப் பார்க்கும் சந்ததி தோன்றி நூற்றாண்டுகளாக ஆகிவிட்டன. இன்று சிங்களவர்களின் மதமாக பௌத்தத்தை கொள்கின்ற போக்கு சிங்களவர்கள் மத்தியில் மாத்திரமல்ல தமிழர் , முஸ்லிம்கள் மத்தியிலும் கூட நம்புகின்ற போக்கு அரசியல் ஆபத்தைக் கொண்டது.



இன்றைய இனச்சிக்கலில் இதன் வகிபாகத்தை மறுக்க முடியாது. தமிழில் அவசியமான, அவசரமான ஆய்வுக்குட்படுத்த வேண்டிய விடயம் "இலங்கையில் தமிழ் பௌத்தம்" பற்றிய ஆய்வுகள். பல்கலைக்கழகங்களில் அரசியல், வரலாற்றுத் துறை, தொல்பொருள்துறை மாணவர்களுக்கு இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்ளும் படி வலியுறுத்த வேண்டியதன் தேவை அதிகமுள்ளது.

~~ என்.சரவணன் ~~

## The "Dutch Fort" - Batticaloa



Early view of the Batticaloa Fort from North – West in Portuguese era.

Batticaloa is the main city in the Eastern province of Sri Lanka. It is called as the "Land of the Singing Fish".

The Batticaloa Fort was originally constructed by the Portuguese in 1628.


The Fort was captured by the Dutch with the support of local chieftains on the direction of the Kandyan King Rajasingha-II in 1638. It was demolished in 1638 and rebuilt in 1665 by the Dutch.

The Fort was surrendered to the British without any resistance in 1796.

Therefore, this Fort is one of the major historical monuments in the country and a memorial of three colonies.

The Fort has a structure of four bastions and it is surrounded by the Batticaloa Lagoon on two sides and a canal on the other two sides. It is still in a good state of preservation. The Batticaloa District secretariat and many local departments are located within the Fort.

There is an "VOC" emblem inscribed on a triangular stone over the main entrance of rampart. The inscription is records the fact the Fort was reconstructed by the Dutch government with the collaboration of the East India Company.





வாவி கடலோடு கலக்கும் கழிமுகத்திற்குச் சில கடல் மைல்களுக்கப்பால் கடலில் நங்கூரமிட்டிருந்தது கப்பல். வாவியிலிருந்து கழிமுகத்தினூடாகக் கடலில் பிரவேசித்துப் பயணித்துக் கொண்டிருந்த படகு கப்பலின் அருகே வந்த போது கப்பல் சத்தமிட்டுச் சொன்னது.

-"ஏ படகே! என் அருகில் வராதே! நீ என்னைவிடத் தாழ்ந்தவன்"

படகு நிதானமாய் பதில் சொல்லிற்று.

-"நீயும் நானும் நீரில்தானே மிதக்கிறோம். பயணிக்கிறோம்.
இதில் என்ன ணுயர்ந்தவன் தாழ்ந்தவன்."

படகின் பதிலைக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே "என் தோற்றத்தைப் பார்த்தாயா? எவ்வளவு பிரமாண்டமாகக் கட்டப் பெற்றிருக்கின்றேன். என்னிடம் உள்ள வசதிகளொன்றும் உன்னிடம் இல்லை. உலகில் பல நாடுகளும் பணக்காரர்களும்தான் என்னைச் சொந்தமாக வைத்துள்ளனர். நான்; சுற்றிவராத உலக நாடுகள் இல்லை. என்னில் ஏறிப் பயணிக்கவும் என்னைப் பார்வையிடவும் கூட்டம் கூட்டமாக மக்கள் வருகின்றார்கள். உனது சொந்தக்காரன் ஓர் ஏழை மீனவன்தானே. உன்னில் பயணிப்பதும் ஓரிருவர்தானே. கடலிலும் உன்னால் வெகுதூரம் செல்லமுடிவதில்லை. அப்படியிருக்கும்போது நீயும் நானும் எப்படிச் சமம். எனக்குப் பக்கத்தில் வரவும் உனக்குத் தகுதியில்லை." என்று கப்பல் தன் பெருமைகளைப் பற்றி ஒரு பாரதமே படித்தது.

எல்லாவற்றையும் பொறுமையோடு காதில் வாங்கிக் கொண்டிருந்த படகு கப்பலுக்கு எப்படிப் பாடம் புகட்டலாம்? என்று சிந்தித்தது. படகின் சிந்தனையில் ஒரு பொறி தட்டிற்று.

கப்பலைப் பார்த்து "இவ்வளவு பெருமைகளையெல்லாம் பீத்திக் கொள்கின்றாயே! உனக்கொரு சவால் விடுகிறேன். என்னால் வாவி, கடல் இரண்டிலும் பயணிக்க முடியும். உன்னால் முடிந்தால் வாவிக்கு வந்து பயணித்துப் பார்" என்றது.

தனது பலவீனத்தை உணர்ந்து கொண்ட கப்பல் அமைதியானது.

~~ செங்கதிரோன் ~~




# மனதில் உறுதியிருந்தால், சாதிக்க தவறுவதில்லை

சுயம்பு லிங்கம் வீற்றிருக்கும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் முன்பாக நீண்டு செல்லும் பிரதான வீதியினூடாக சென்று, வயலும் பாலமும் ஏனைய பலவற்றையும் கடந்த போது, ஆங்காங்கு வீடுகளும், மேட்டு நிலங்களும் பரந்திருந்த "குருந்தையடிமுன்மாரி" கிராமத்தினை அடைந்தேன்.

அங்கே, கிறவல் போன்ற நிறத்தில்

## இருகைகள் இல்லாமலும் சாதித்து காட்டிய டிலாணி!



தகரக்கூரையும், களிமண்ணால் ஆன சுவரையும் கொண்ட வீடொன்று காணப்பட்டது. அவ்வீட்டின் பகுதிகளை சுற்றி அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கல்வீடுகளும் காட்சி கொடுத்தன. வீடு அமைந்துள்ள பகுதிக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு கம்புகளை கொண்டு அமைக்கப்பட்ட வேலியும் அமைக்கப்பட்டிருந்தது. தகரக்கூரையும், களிமண்ணால் ஆன சுவரையும் கொண்ட வளவினுள்ளே உட்சென்ற போது, என் கண்களில் இருந்து கண்ணீர் என்னையறியாமலே சொட்டன விழுந்தது.


என்ன பேசுவதுதென்றே தெரியாமல் வாய் தடுமாறியது. கண்களை கசக்கிக் கொண்டு வீட்டினை எட்டிப்பார்த்தேன், மனம் குளிர ஆரம்பித்தது. மூன்று விருதுகள் வீட்டுக்குள்ளே இருந்தன. 2017ம் ஆண்டில் வழங்கப்பட்ட கலைஞர் கௌரவம், 2013ல் வழங்கப்பட்ட இளங்கரகக் குயில் விருது, 2012ல் வழங்கப்பட்ட மக்கள் கலை முதுசொம் ஆகியவை அவை.

இதற்கு சொந்தக்காரர் யாரென பக்கத்தில் நின்ற அம்மாவை வினாவினேன், அப்போது, மகள் டிலாணிதான் என்றார். இன்னமும் மகிழ்ச்சி மேலோங்கியது. உண்மையில் டிலாணி ஒரு கரகக்குயில்தான், இது போதாது இன்னமும் பல விருது வழங்கி இருக்க வேண்டுமென்ற சிந்தனையும் என்னுள் எழுந்தது.

ஏன் இவ்வாறு கூறுகின்றேன் என்று எல்லோரும் யோசிக்கலாம். நான் சொல்வதை கேட்டால் நீங்களும் வியந்து நிற்கத்தான் செய்வீர்கள்!

இறைவன் படைப்புக்களில் மனிதர்கள் எல்லோரும் ஒன்றுதான் என்றாலும், ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு குறைபாட்டுடனேயே பிறந்து விடுகின்றான்.

இறைவனோ டிலாணியை இரு கைகளும் இல்லாதவளாக 1992.09.23ம் ஆண்டு குணரெத்தினம் மற்றும் குணேஸ்வரி ஆகியோருக்கு இரண்டாவது பிள்ளையாக படைத்துவிட்டான். அவளும் பிறந்து வளர்ந்து சுயமாகச் சிந்திக்க தலைப்பட்ட வேளை ஏன் பிறந்தேன், ஏன் என்னை இவ்வாறு இறைவன் படைத்துவிட்டான் என்ற கவலையும், பிறப்பின் வெறுப்பும் இவளுக்கு இருக்காமலில்லை. ஆனாலும் அவை தொடரவில்லை. எல்லோரும் ஏதோ ஒரு குறையுடன்தான் பிறந்திருக்கின்றனர் என்ற யதார்த்தத்தினை புரிந்துகொண்டதாக கூறுகின்றாள். இப்பகுதியிலுள்ள மக்கள் இப்போதுதான், கல்வியை அணுகிவருகின்ற சமூகம். ஆனாலும் டிலாணி கைகள் இன்றி பிறந்தாலும் கல்வி கற்கத்தவறவில்லை.



தன்னுடன் பிறந்த சக நண்பர்களுடன் கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்திலே தரம் 10வரை கல்வி கற்றதாக கூறுகின்றாள்.

## கையில்லை காலால் எழுதினேன் என்றாள் இளங்கரகக் குயில்


கையின்றி எவ்வாறு எழுதிப் படித்திருக்க முடியும் என்ற யோசனை எனக்கு



அவ்விடத்தில் டிலாணி கூறும்போது, ஏற்பட்டது. உடனே டிலாணியிடம் வினாவினேன் தனது கால்களினாலே எழுதியதாக கூறினாள், அதனைக் கேட்ட போது சந்தோசமும், வியப்பும் என்னுள்ளே ஏற்பட்டன. கால்களினால் எழுதுவதனை பார்க்க வேண்டுமென்ற அவாவும் எனக்கு தோன்றியது. கால்களால் எழுதிக்காட்டுவீர்களாக என்று கேட்ட போது, மறுப்பின்றி ஆர்வத்துடன் எழுதிக்காட்டினாள். எழுதுகின்ற வேகமும், எழுத்தின் அழகும் என்னை மிகவும் ஆச்சரியத்துக்குள்ளாகியது. கைகள் இருந்தும் எழுத்தினை அழகாக எழுதமுடியாத பலரின் மத்தியில் டிலாணியின் செயற்பாடு பிரமிக்க வைத்ததொன்றுதான். வீட்டிலே தாய், தந்தையுடள் வாழ்ந்து கொண்டிருக்கும் டிலாணி, கரகப்பாடல்களையும், நாட்டார் பாடல்களையும் படிப்பதிலும் மிகவும் கெட்டிக்காரி. இந்த கெட்டிதனத்தினால்தான் விருதுகளுக்கும் சொந்தாரக்காரியாகிருக்கின்றாள்.

கூலிவேலை செய்து தனது தந்தை தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதாக கூறுகின்றாள். இதனால், தான் சுயமாக உழைத்து சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையும் இவளுக்கு இல்லாமல் இல்லை. ஆகவே, சுயதொழிலையும் செய்து கொண்டு, தனது சம்பாத்தியத்திலும் வாழ்ந்து கொண்டிருப்பதாக பெருமையாக கூறுகின்றாள். வசதிகள் இருந்தும், உடல் அங்கங்கள் ஒழுங்காக இருந்தும் கற்க, சாதிக்க தவறும் பலருக்கு மத்தியில் டிலாணி போன்றோர்கள் பல படிகளை கடந்து உயர்ந்து நிற்கின்றனர் என்பதே நிதர்சனம்.

~~ வயிரமுத்து துசாந்தன் ~~





# திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய குடமுழுக்கு !

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்றுச்சிறப்புமிக்க "திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்" பழைமையும் பெருமையும் உடையது. இதன் வரலாறு ஈழவேந்தன் இராவணனோடு தொடர்புடையதாக ஐதிகம்.

உலகம் உய்ய வேல் வடிவாக வந்து வெள்ளநாவல் மரத்தில் திருமுகன் வீற்றிருந்த புண்ணிய தலம் திருக்கோவில் ஆகும்.

முருகப்பெருமானின் ஞானவேல் வாகூர மலையை இருகூறாகப் பிளந்தது. அப்போது தோன்றிய மூன்று ஒளிப்பிழம்புகள் வேல் வடிவாகின. அவற்றுள் ஒன்று கடலருகே நின்ற வெள்ளைநாவல் மரத்திலே வேல்வடிவாக வீற்றிருந்தது. வேட்டையாட வந்த வேடுவர்கள் கண்டு வேலை வணங்கத் தொடங்கினர்.இதனால் "வெள்ளைநாவலம்பதி" என்ற பெயர் ஏற்பட்டது.கந்தப்பெருமானுடைய பாணம் தங்கியிருந்தமையால் "கந்தபாணத்துறை" என்றும், நாகர் இனத்தவர் வாழ்ந்த இடமென்பதால் "நாகர்முனை"

அமைத்தனர். இதனால் "திருக்கோவில்" என்ற பெயர் ஏற்பட்டது. 2000 வருடங்கள் பழைமை வாய்ந்தஇவ்வாலயம் நீண்டகாலத்திற்கு பிறகு தற்போது புதுப்பொலிவு பெற்றுவருகிறது. இராஜகோபுரத்தைத் தவிர ஏனைய அனைத்து ஆலயபிரகாரங்கள் புதிதாக அமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுவருகின்றன.

கடந்த 2015இன் கடைக்கூற்றில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அதன்பின்பு முருகப்பெருமானின் விக்கிரகம் இல்லாமல் ஆடிஅமாவாசை தீர்த்தம் இடம்பெற்றுவந்தது. 15வருடங்களுக்குப்பிறகு எதிர்வரும் ஜுன் மாதம் 25ஆம் திகதி மகாகும்பாபிசேகம். ஆலயநிருவாகம் பிரதமகுருக்கள் சிவஸ்ரீ.சண்முக மகேஸ்வரக்குருக்களின் ஆலோசனையில் மகா கும்பாபிசேகம் செய்ய திருவருள் கூடியுள்ளதாக ஆலயத்தலைவர்

சகல கணக்குவழக்குகளும் மாதாமாதம் பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டுவருகிறது. திருப்பணிக்கு இறுதிக்கட்ட வேலைகளுக்கு உதவுவோர் 224-1-001-8-0042250 என்ற கணக்கிற்கு வைப்புச்செய்யமுடியுமென்று கூறப்பட்டுள்ளது.

தற்போது ஆலயம் துரிதமாக அபிவிருத்திகண்டுவருகின்றது. ஆலயத்தலைவர் சு.சுரேஸ் விடுத்தவேண்டுகோளின்பேரில் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் கனகலிங்கம் ஐங்கரன் என்பார் அண்மையில் அங்கு ஒன்றரைகோடிருபா செலவில் பல்தேவைமண்டபமொன்றையும் 10ஆயிரம் லீற்றர் தாங்கும் தண்ணீர்தாங்கியொன்றையும் அமைத்துக்கொடுத்துள்ளார். அதேபோல முன்பக்க வாயிலை திருவாசிவடிவில் அமைத்து கேற்றும் அமைத்தது கல்முனை பாண்டிருப்பு ஜிகே சினிமா.



~~ விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா ~~

என்றும் பெயர்கள் உண்டு. வடக்கு முகமாக இருந்த வேல்முருகனுக்கு கண்டி மன்னன் ஆகம முறைப்படி ஆலயம் அமைக்க முற்பட்டான். அந்தரத்துத் தேவர்களும் அதிசயிக்க சுந்தரவேல் தானாகவே கிழக்கு முகமாகத் திரும்பியது. அற்புதங்கண்ட அரசனும் அடியார்களும் கிழக்கு முகமாக ஆலயத்தை


சுந்தரலிங்கம் சுரேஸ் கூறுகிறார்.

புனருத்தாரண வேலையை முன்னெடுக்க 27பேர் கொண்ட திருப்பணிச்சபையொன்று திருக்கோவில் பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜனைக் காப்பாளராகக்கொண்டு அமைக்கப்பட்டது. திருப்பணிக்கென தனியான கணக்கொன்று திருக்கோவில் மக்கள்வங்கிக்கிளையில் திறக்கப்பட்டு











அரங்கம்

அரங்கம் FM

உங்கள் விளம்பரங்களை அரங்கம்
இணைய வானொலி மற்றும் செய்த்தாளில்
பதிவு செய்து கொள்ள

070 300 900 1 065 222 911 2



# அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பேர்ணில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் ஆற்றிய உரையில் இருந்து

1960களில் கவிஞர் காசிஆனந்தன் இயற்றி ஜீவம் யோசப் அவர்களினால் இசையமைக்கப் பெற்றுப் பாடப்பெற்ற மிகவும் பிரபல்யமான,

"மீன் மகள் பாடுகிறாள்! வாவிமகள் ஆடுகிறாள்!

மட்டுநகர் அழகான மேடையம்மா! - இங்கு எட்டுத்திக்கும் கலையின் வாடையம்மா!

எனும் பாடல் மட்டக்களப்பின் கலை இலக்கிய வளத்தைக் குறிப்பதாயினும் முழுக் கிழக்கிலங்கைக்கும் இது பொருந்தும். கலைவளமும் இலக்கியவளமும் நிறைந்தது கிழக்கிலங்கை மண்.

வைத்து "தென்மோடி" , "வடமோடி" என வகைப்படும்.

கிழக்கிலங்கைக் கிராமங்களில் "அண்ணாவியார்" என அழைப்படுவோர் இந்த "வட்டக்களரி" க் கூத்தைப் பாதுகாத்துப் பேணி வளர்த்து வந்தனர். இந்த அண்ணாவிமார் கூத்துப்பிரதிகளை எழுதுவதிலும் - கலைஞர்களைத் தேர்வு செய்வதிலும் - கூத்தை நெறியாள்கை செய்வதிலும் அதாவது கூத்துப்பழக்குவதிலும் மிகப் பிரதானமான பங்கை வகித்தனர்.

இந்த அண்ணாவிமார் சமூகத்தில் பிரபல்யம் பெற்றவர்களாகவும் - மதிப்புக்குரியவர்களாகவும் - செல்வாக்கு மிக்கவர்களாகவும் விளங்கினர்.

அண்ணாவிமார் பரம்பரை எனும் படிக்கு அது குடும்பவழி வளர்ந்தும் வந்தது.

ஆண் பாத்திரங்களை ஆண்களும் பெண் பாத்திரங்களை பெண்களும் ஏற்று நடிக்கும் மாற்றம் ஏற்பட்டது. ஒப்பனைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. புதிய இசை வடிவங்களும் பாடல்மெட்டுக்களும் ஒலி ஒளி அமைப்புக்களும் இசைநாடகங்களின் கூறுகளும் உள்வாங்கப்பெற்றன.

இவ்வாறு மாற்றமடைந்த கூத்து ஆரம்பத்தில் "நவீன நாட்டுக் கூத்து" என அழைக்கப்படலாயிற்று. இப்போது "கூத்துருவநாடகம்" எனப்படுகிறது.

இந்தப் பின்னணியில் கிழக்கிலங்கைக் கிராமங்களிலிருந்து அண்ணாவிமார்கள் பல்கலைக்கழகத்திற்கு அழைக்கப்பெற்று கூத்தை நவீன மயப்படுத்தலில் அவர்களது ஆலோசனைகளும் உதவியும் பெறப்பட்டமையும் பல்கலைக்கழக மட்டத்தில்

## கிழக்கிலங்கையின் கலை இலக்கியச் செல்நெறி

வடக்கே திருகோணமலை மாவட்டம் தென்னைமரவாடிக் கிராமத்திலிருந்து தெற்கே அம்பாறை மாவட்டம் பொத்துவில் கிராமத்திற்கும் அப்பால் குமுக்கன் ஆறுவரை வங்காள விரிகுடாக் கடலோரம் நீண்டு நிலப்பண்பினால் நெய்தலும் மருதமும் முல்லையும் நிறைந்து இலங்கையின் கிழக்குக் கரையோர மாகாண மாகத் திகழும் கிழக்குமாகாணமே கிழக்கிலங்கை என்பது.

தற்போது கிழக்கிலங்கை என்பது மட்டக்களப்பு மாவட்டத்தை நடுநாயகமாகக் கொண்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கித் திருகோணமலை, மட்டடக்களப்பு, அம்பாறை எனும் மூன்று நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியது.

கிழக்கிலங்கையின் கலை இலக்கியச் செல்நெறி" எனும் தலைப்பிலே இந்த ஆக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தையே குவிமையமாகக் கொண்டிருந்தாலும் அது முழுக் கிழக்கிலங்கைக்கும் பொருந்தும் என்பதை மனங்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆனாலும் கூட அவ்வப்போது அவசியம் ஏற்படும் போது "ஊறுகாய்" போல திருகோணமலை மாவட்டத்தையும் அம்பாறை மாவட்டத்தையும் இது தொட்டுச் செல்லும்.

மட்டக்களப்பு என்றதும் முதலில் நம் நினைவில் எழுவது கூத்துக்கலை ஆகும். கூத்து என்று இங்கு குறிப்பிடப்படுவது மட்டக்களப்புக் கிராமங்களில் "வட்டக்களரி" மேடையில் மூன்று அல்லது நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் இரவு விடியவிடிய ஆடப்பெறும் "நாட்டுக்கூத்து" ஆகும். இது தாளக்கட்டு மற்றும் அதற்கேற்றவாறான அங்க அசைவு என்பவற்றை அடிப்படையாக

கூத்துப் பிரதிகள் மகாபாரதம் மற்றும் இராமாயணம் போன்ற இதிகாசங்களையும் அரிச்சந்திரபுராணம், நல்லதங்காள் கதை, அருந்ததி சரித்திரம் போன்ற புராணங்களையும் - ஆடகசௌந்தரி, உலகநாச்சியார், வெடியரசன் போன்ற வரலாறுகளையும் - சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களையும் அடிப்படையாக வைத்து அல்லது அவற்றைத் தழுவியுமே எழுதப்பெற்றன. இக் கூத்துக்கள் மேடையேற்றப்படும் போது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மணித்தியாலங்களை எடுத்துக் கொண்டன. பெண் பாத்திரங்களை ஆண்களே வேடமேற்று நடிக்கும் வழக்கமே இருந்தது.

ஆனால் இன்று இந்த "வட்டக்களரி"க் கூத்து வடிவம் அருகிவிட்டது. காரணம் 1960 களில் பேராதனைப் பல்கலைக்கழக மட்டத்தில் கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பெற்ற பாரம்பரியக் கூத்துவடிவினை நவீனமயப்படுத்தல் ஆகும். 1960களில் கூத்துப் பரிச்சயமுள்ள ஒரு தொகுதி இளைஞர்கள் கிழக்கிலங்கைக் கிராமங்களிலிருந்து பட்டப்படிப்பிற்காக இலங்கைப் பல்கலைக்கழகம் அதாவது பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றமை இதற்குக் காலாய் அமைந்தது.

மட்டக்களப்புச் சீலாமுனைக் கிராமத்திலிருந்து சென்ற மௌனகுரு பிரதானமான பங்கை வகித்தார். இரவு விடியவிடிய மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் ஆடப்பெற்ற பாரம்பரியக் கூத்து வடிவமானது ஒரு மணித்தியால நேரத்திற்குள் மேடைநாடக வடிவில் மூன்று பக்கம் அடைக்கப்பெற்ற சட்டக மேடையில் நிகழ்த்தப்பெறும் வண்ணம் குறுக்கப் பெற்றது. நீண்ட உரையாடல்களும் விருத்தங்களும் பாடல்களும் குறுக்கப்பெற்றும் சுருக்கப்பெற்றும் இறுக்கமாக்கப் பெற்றன.

அவர்கள் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையைச் சேர்ந்த செல்லையா அண்ணாவியார் இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களுள் பிரதானமானவர். அண்ணாவிமார்களைத் தவிர கிழக்கிலங்கையின் பல பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் கூத்துக்கலையில் பரிச்சியம் உள்ளவர்களாகவும் ஆற்றல் உடையவர்களாகவும் விளங்கினர். இத்தகையோரால் மாணவமாணவிகளைக் கொண்டு பாடசாலைகள் மட்டத்தில் கூத்துக்கள் அரங்கேறின.



த.கோபாலகிருஷ்ணன்

1960 களில் பல்கலைக்கழக மட்டத்தில் கலாநிதி சு.வித்தியானந்தனின் நெறியாள்கையில் மௌனகுரு இராவணன் பாத்திரமேற்று நடித்த "இராவணேசன்" கூத்து கிழக்கிலங்கைப் பாடசாலைகளில் இத்தகைய நவீன நாட்டுக் கூத்துக்கள் நிகழ்த்தப் பெறுவதில் தாக்கமும் செல்வாக்கும் செலுத்திற்று எனலாம். பாடசாலைகளுக்கிடையே கூத்துப்போட்டிகள் நடைபெறவும் இது வழிவகுத்தது. இன்று அரச மட்டத்தில் நடைபெறும் தமிழ்த்தின விழாப் போட்டிகளில் கூத்தும் இடம்பெற்றுள்ளது.

1960 களில் மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் (இன்று கிழக்குப் பல்கலைக்கழகத் தொகுதி) ஆசிரியப் பணி புரிந்த தம்பிராசா ஆசிரியர் தயாரித்த "குருகேத்திரன் போர்" எனும் கூத்து அகில இலங்கை ரீதியாகப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பெற்ற போட்டியில் முதற்பரிசு பெற்றதை இங்கு குறிப்பிடலாம்.

மௌனகுரு அவர்கள் இக் கல்லூரியின் பழைய மாணவராவார். பின்னாளில் க.பொ.த உயர்தர கலைப்பாடத்திட்டத்தில் "நாடகமும் அரங்கியலும்" எனும் பாடம் புகுத்தப் பெற்றமையும் - மட்டக்களப்பு கல்லடியில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி நிறுவப் பெற்றமையும் கிழக்கிலங்கையின் பாரம்பரியக் கலை வடிவமான நாட்டுக் கூத்தினை நவீன விஞ்ஞான தொழில் நுட்ப மாற்றங்களையும் உள்வாங்கி நவீன மயப்படுத்துவதில் கணிசமான பங்களிப்பை வழங்கின.

சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி பின்னாளில் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்று இப்போது சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் என அழைக்கப்படுவதுடன் இசை, நடனம், ஓவியம், சிற்பம் உள்ளிட்ட சகல நுண்கலைகளும் இங்கு பயிற்றுவிக்கப்பெற்று வருடாவருடம் இந்நிறுவகத்திலிருந்து வெளிவரும் நுண்கலைப் பட்டதாரிகள் கிழக்கிலங்கையின் சகல பாடசாலைகளிலும் பரவலாக நியமனம் பெறுவதால் கலை இலக்கியச் செயற்பாடுகள் கிராமப்புறங்கள்வரை விரிவாக்கம் பெற்றுள்ளன.

பேராசியர் சி.மௌனகுரு போன்றவர்களால் கூத்தை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் மேலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவரால் நிறுவப்பெற்ற மட்டக்களப்பு "அரங்க ஆய்வுகூடம்" எனும் அமைப்பு இதில் பாரிய பங்களிப்பைச் செய்து வருகிறது. கலை இலக்கியச் செயற்பாடுகளில் பல பரீட்சார்த்தமான முயற்சிகளையும் ஆய்வுகளையும் "அரங்க ஆய்வுகூடம்" மூலம் பேராசியர் மௌனகுரு அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

அண்மையில் அரங்க ஆய்வு கூட மாணவர்களைக் கொண்டு அவரால் தயாரித்து நெறியாள்கை செய்து அளிக்கப்பெற்ற ஆறாவது தலைமுறையைச் சேர்ந்த "இராவணேசன்" 1960 களில் பல்கலைக்கழக மாணவனாக அவர் இராவணன் பாத்திரமேற்று நடித்த "இராவணேசன்" முதலாம் தலைமுறை எனின் 2016 இல் இப்போது பல புதிய மாற்றங்களுடன் மேடையேறிய "இராவணேசன்" ஆறாம் தலைமுறை ஆகும் - மற்றும் "காண்டவதகனம்" ஆகிய கூத்துருவ நாடகங்கள் இத்தகைய மாற்றத்தின் மைல் கற்களாகும்.

*(தொடரும்)*








## ஆட்கள் தேவை

எமது நிறுவனத்தின் பத்திரிகை மற்றும் வானொலியில் பணியாற்ற ஆர்வம் உள்ளவர்கள் தேவை.

முழுநேர மற்றும் பகுதி நேர பணியாளர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

பத்திரிகையில் செய்தி சேகரிப்பு, செய்தித்தொகுப்பு மற்றும் பக்க உருவாக்கம் ஆகியவற்றில் அனுபவம் உள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள். அனுபவம் இல்லாதவர்கள் பயிற்சியாளர்களாக கற்றுக்கொள்ளவும் முடியும். ஆனால், ஆர்வம் அவசியம்.

அதேபோன்று வானொலித் தயாரிப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சி வழங்குனர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு :
அரங்கம் நிறுவனம்,
227 பார் வீதி மட்டக்களப்பு.

தொலைபேசி :
070 345 68 00





